பக்கங்கள்: பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 26 ஞாயிற்றுக்கிழமை (09-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:196

# 18 ஜெனரேற்றர்கள் இன்று வருகின்றன!

## சிவாவின் உடல் இன்று தீயுடன் சங்கமமாகும்!

### அத்துளு திடலில் இறுதி அஞ்சலிக் கூட்டம்



கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவர்கள் பேழையைச் சுமந்து வந்த போது....

வடமராட்சி,ஜூன்9

பல்லாயிரக்கணக்கான மக்களின் இறுதி அஞ்சலியின் பின்னர் தலைவர் முருகேசு சிவசிதம்பரத்தின் புகழுடல் இன்று நண்பகல் தகனம் செய்யப்படும்.

அமரரின் குடும்ப மயானமான கரவெட்டி சோனப்பு மயானத்தில தந்தையின் சிதைக்கு மகன் சத்தியேந்திரா சிவசிதம்பரம் தீமூட்டுவார்.

முன்னராக கரவெட்டி அத்துளு நீர்த்தேக்கத்திட்டம் அருகே உள்ள திறந்தவெளியில் அஞ்சலிக் கூட்டம் நடைபெறும். அரசியல் பிரமுகர்கள், கூட்டமைப்புத் தலைவர்கள், சமயத் தலைவர்கள், பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் அஞ்சலி உரைகளை நிகழ்த்துவர். அதன்பின் தகனக்கிரியை நடைபெறும்.

கரவெட்டியில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டிருக்கும் புகழுடலுக்கு நேற்று பெரும் எண்ணிக்கையான மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அவரது இல்லத்தில் இன்று காலை 8மணிமுதல் சமய்க்கிரியைகள் இடம்பெறும். அதன்பின்னர் முற்பகல் 11 மணியளவில் உடல் அத்துளு நீர்த்தேக்கத் திட்டம் அருகே உள்ள திறந்தவெளிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இறுதிச் சடங்கில் அரசுத்தரப்புப் பிரதிநிதிகளான அமைச்சர்கள் கரு ஜெயசூரிய, ஜயலத் ஜயவர்த்தன, ஏ.எச்.எம்.அஸ்வர், தி.மகேஸ்வரன் ஆகியோரும் அமைச்சர் ரவூப் ஹக்கீமும் பங்குபற்றுவர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இம்மாத இறுதிமுதல் 24 மணிநேர மின்

யாழ்ப்பாணம்,ஜூன்9

**யாழ்.குடாநாட்டுக்கு மின்சாரம் வழங்குவதற்காக சுன்னாகத்தில் அமைக்கப்பட்டுவரும் புதிய மின் நிலையத்தில் பொருத்துவதற்காக பதினெட்டு பாரிய ஜெனரேற்றர்கள் இன்று தரைவழியாக இங்கு எடுத்து வரப்படவுள்ளன.**

**இந்த ஜெனரேற்றர்கள் ஒவ்வொன்றும் சுமார் 40 அடி நீளமான 18 கொன்ரெயினர்கள் அடங்கிய நீண்ட தொடர் வாகன அணியில் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேரவுள்ளன.**

கொழும்பிலிருந்து நேற்று வவுனியாவுக்கு எடுத்து வரப்பட்ட இந்த ஜெனரேற்றர்களை இன்று அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் - இன்று ஞாயிற்றுக்கிழமையாக இருந்தபோதிலும் ஜெனரேற்றர்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



... 'ஷொக்' அடிக்கிற செய்தியாய் எல்லோ இருக்கு...

## பிரதமர் ரணில் சாயி பாபாவை தரிசிப்பார்

பெங்களூர்,ஜூன்9

இந்திய விஜயத்தின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெங்களூரில் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவைத் தரிசிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதுடில்லி செல்லும் வழியில் நேற்று பெங்களூரில் செய்தியாளர்களிடம் பேசியபோது பிரதமர் இத்தகவலைக் கூறியதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாடு நேற்று சோபையிழந்தது!

யாழ்ப்பாணம்,ஜூன்9

மூத்த தலைவர் அமரர் மு.சிவசிதம்பரத்தின் மறைவினால் குடாநாடு சோகத்தில் ஆழ்ந்துள்ளது. நேற்று முழுநாளும் பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டதால் யாழ்நகரப்பகுதி உட்பட பல பிரதேசங்களும் சோபையிழந்து காணப்பட்டன.

குடாநாட்டில் சகல பிரதேசங்களிலும் கறுப்புக்கொடிகளும் தோரணங்களும் வாழைகளும் கட்டி மக்கள் தமது துயரத்தை வெளிக்காட்டினர். பல இடங்களில் சோக இசை ஒலிபெருக்கி மூலம் இசைக்கப்பட்டது.

அண்மைக்காலத்தில் மிகவும் கலகலப்படைந்து காணப்பட்ட யாழ்நகரம் நேற்று முற்றாக செயலிழந்தது.

யாழ்நகரம் உட்பட சகல பகுதிகளிலும் வர்த்தக நிறுவனங்கள் மூடிக் கிடந்தன. வர்த்தகர்கள், தொழிலாளர்கள் அஞ்சலிநிகழ்வுகளில் பங்குபற்றினர்.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளில் வீதிகளில் பெரிய அளவில் அஞ்சலி பதாகைகளும் காணப்பட்டன.

தனியார் கல்வி நிறுவனங்களும் நேற்று மூடப்பட்டுக் கிடந்தன. போக்குவரத்தும் குறைந்து காணப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)



நாவாந்துறை புதுப்பள்ளிவாசலில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்.

## குடாநாட்டில் புதிய படைமுகாம்கள் பலப்படுத்தல்கள் ஏன்?

### புலிகள் பிரதிநிதி கேள்வி

யாழ்ப்பாணம்,ஜூன்9

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்குவந்த பின்னர் கொழும்பிலும், ஏனைய இடங்களிலும் சோதனைச் சாவடிகள் நீக்கப்பட்டு மக்கள் சுதந்திரமாக நடமாட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் குடாநாட்டில் மட்டும் புதிய முகாம்கள் அமைக்கப்படுகின்றன. முகாம்களின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டு வருகிறது.

இப்படிச்செய்வதன்மூலம் படையினர் மக்களின் சுதந்திர நடமாட்டத்திற்குத தடை விதிப்பது ஏன்?

இப்படி கேள்வி எழுப்பியுள்ளார் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி.

அரசியல்துறை அலுவலகத்தில் நேற்று மாலை நடத்திய செய்தியா

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் அதிகாரப்பகிர்வு: மு.காங்கிரஸின் விருப்பம் இது!

### யாழ்நகரில் ஹக்கீம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்9

வடக்கு - கிழக்குப் பகுதி, தமிழ் - முஸ்லிம் மக்களுடைய தாயகப் பிரதேசமாகும். அந்த வகையில் இங்கு இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்படும்போது, விடுதலைப் புலிகளுடன், அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளவே முஸ்லிம் காங்கிரஸ் விரும்புகின்றது.

இப்படித் தெரிவித்தார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம்.

தலைவர் மு.சிவசிதம்பரத்தின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொள்வதற்காக அமைச்சர் ஹக்கீம் தரைப்பாதை ஊடாக நேற்று யாழ்ப்பாணம் வந்தார். நாவாந்துறை முஸ்லிம் வட்டாரத்திலுள்ள புதுப்பள்ளி வாசலில் (முஹம்மதியப் பள்ளிவாசல்) அவர் நேற்று மாலை செய்தியாளர்களை சந்தித்தார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது:-

இன்று காலை (நேற்று) கிளிநொச்சியிலுள்ள புலிகளின் அரசியல்துறை பணிமனையில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனும் மற்றும் பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களை நடத்தியிருந்தோம். இதன்போது கடந்த ஏப்ரல் மாதமளவில் புலிகளுக்கும் - முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட விடயங்களை முறையாக நடை

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## தமது வான்பரப்புக்குள் பறந்த
# இந்திய உளவு விமானத்தை
# வீழ்த்தியதாக பாக்.அறிவிப்பு!
## இதனால் போர் மூளும் அபாயம்!!

லண்டன்,ஜூன்9

**இந்தியாவுக்குச் சொந்தமான ஆளில்லாத் தானியங்கி உளவுவிமானம் ஒன்று தமது பகுதிக்குள் பறந்த சமயம், அதனைத் தாம் சுட்டு வீழ்த்தியதாக பாகிஸ்தானிய இராணுவம் அறிவித்தது. இரு நாடுகளிடையேயும் இதுவரை நிலவி வந்த பதற்றநிலை விமானம் வீழ்த்தப்பட்டதையடுத்து போராக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது.**

இந்திய உளவு விமானம் வீழ்த் தப்பட்டது தொடர்பாக பாகிஸ்தானிய இராணுவம் நேற்று வெளியிட்ட அறி விப்பில் கூறப்பட்டிருப்பதாவது -

லாகூர் நகரின் அருகே பாகிஸ்தா னிய வான்பரப்பில் நேற்றுமுன்தினம் இந்தியாவுக்குச் சொந்தமான ஆளற்ற தானியங்கி உளவு விமானம் ஒன்று உளவு நடவடிக்கையில் ஈடுபடுவது அவதானிக்கப்பட்டது. இதனையடுத்து பாகிஸ்தானிய விமானப் படையின் 'ஜெற்' விமானங்கள் உள்ளூர் நேரப் படி இரவு 11 மணி அளவில் இந்திய உளவு விமானத்தைத் தாக்கின. தாக்கு தலுக்குள்ளான உளவு விமானம் எல் லைப்புற பஞ்சாப் மாகாணத்தின் ராஜா ஜவ் நகரருகே விழுந்தது.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து பாகிஸ் தானிய இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரஷீத்குரோஷி கூறுகையில-

இந்திய உளவு விமானம் பாகிஸ் தானிய வான்பரப்பில் பறந்தமை, சர்வதேச நிலைப்பாடுகளை இந்தியா உதாசீனப்படுத்துவதையே எடுத்துக் காட்டுவதாகக் கூறினார்.

இதேசமயம், தனது ஆளில்லாத தானியங்கி விமானம் ஒன்று பாகிஸ் தானிய வான்பரப்பில் காணாமற் போயுள்ளதாக இந்தியா நேற்றிரவு ஒப்புக்கொண்டது. ஆனால், அந்த விமா னம் உளவுப் பணியில் ஈடுபடவில்லை என்று கூறிய இந்தியா வழமையான எல்லைக் கண்காணிப்பு நடவடிக் கையை மட்டுமே அது மேற்கொண்ட தாகத் தெரிவித்தது.

இதற்கிடையில், இந்திய உபகண் டப் பிராந்தியத்துக்கு விஜயம் மேற் கொண்ட அமெரிக்கப் பிரதிநிதி ரிச் சேர்ட் ஆர்மிடேஸ் 'காஷ்மீர் தொடர் பாக இரு நாடுகளுக்கும் இடையில் போர் மூளும் சாத்தியம் குறைய வில்லை' என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(ஒ)

## அமெரிக்காவைப் பாதுகாக்க 1,70,000 பேர் கொண்ட புதிய படை!
### அமைக்கிறார் அதிபர் புஷ்

வாஷிங்ரன்,ஜூன்9

அமெரிக்காவை தீவிரவாதத் தாக்குதல்களில் இருந்து பாதுகாப் பதற்காக ஒரு லட்சத்து 70 ஆயிரம் பேரைக் கொண்ட புதிய படைப் பிரிவு ஒன்றை உருவாக்க அமெரிக்க அதி பர் புஷ் திட்டமிட்டுள்ளார். தொலைக் காட்சி உரையொன்றில் அவர் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

அந்த உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'செப்ரெம்பர் 11 தாக்குதல்கள் குறித்து அமெரிக்க அரசின் உளவு நிறுவனங்கள் முன் கூட்டியே தகவல தெரிவிக்கத் தவறிவிட்டன. இத்த கைய தவறு இனிமேலும் நடக்கக் கூடாது என்பதற்காக உள்நாட்டுப் பாதுகாப்புத்துறை மறுசீரமைக்கப்படு கிறது.

உளவுப் பிரிவு, சுங்கத்துறை ஆகியவற்றை பாதுகாப்புத்துறையுடன் இணைத்து புதிய படைப் பிரிவு ஒன்று உருவாக்கப்படும். இந்தப் படையில் ஒரு லட்சத்து 70 ஆயிரம் பேர் இடம்பெறுவர்.

- இவ்வாறு தெரிவித்தார். (ஒ)

# மீன்பிடி மீதான கட்டுப்பாடுகளை நீக்குமாறு பிரதமரிடம் வற்புறுத்து
## அமைச்சர் மகேஸ்வரன் கடிதம் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்9

யாழ்மாவட்ட மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் பெரும் கெடுபிடிகளை எதிர் நோக்குகின்றனர். இந்தக் கெடுபிடிக ளுக்கு எதிராக அவர்கள் ஆரம்பித் துள்ள நியாயமான போராட்டத்தை தீர்த்துவைக்க உடன் நடவடிக்கை எடுங்கள்!

இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ வரன் மேற்கண்டவாறு பிரதமரிடம் கோரியுள்ளார்.

பிரதமரை அவர் நேரடியாக சந் தித்து இந்தக் கோரிக்கையை விடுத் துள்ளார்.

இராணுவத்தினரும் ஏனைய பாது காப்புப் படையினரும் மீனவ மக்கள் அவர்களின் ஜீவனோபாயத்துக்கான மீன்பிடித் தொழிலை செய்ய விடாது தடுத்து வரும் செயல்களை இட்டு விரிவான கடிதம் ஒன்றை அவர் பிரத மருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் அமைச்சர் தெரிவித் திருப்பதாவது:-

மூன்று மாதங்களுக்கு முன்னர் இத்தகைய கெடுபிடிகளைக் கண்டித்து மீனவ மக்களும் அவர்களின் நிறு வனங்களும் யாழ்ப்பாணத்தில் பெரும் ஆர்ப்பாட்டங்களை தொடர்ச்சியாக நடத்தி, மாவட்ட நிர்வாகத்தை முற் றாக ஸ்தம்பிக்கச் செய்ததை நீங் கள் அறிவீர்கள். அச்சமயம் யாழ்ப் பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னரும் அம்மக்களின் அமைச்சரும் என்ற வகையில் யான் தலையிட்டு படைத் தரப்பினருடன் பலாலி இராணு வத் தலைமையகத்தில் மாநாடு நடத்தி இரு சாராருக்கும் இடையில் ஒரு சமர சத்தைக் கொண்டு வந்தேன். அதன் படி அவர்கள் மீன்பிடிக்க எவ்வித தடையும் இருக்காது என அறிவிக் கப்பட்டது. பின்னர் படைத்தரப்பினர் தமது வாக்குறுதியிலிருந்து பின் வாங்கிவிட்டனர்.

தற்பொழுது மீனவ சமூகத்தினர் மீண்டும் யாழ்ப்பாண கச்சேரி முன் தொடர் மறியற் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதனால் நிர்வாகம் மீண்டும் ஸ்தம்பித்து விட்டது. யாழ்ப் பாண மக்கள் தமது அன்றாட கட மைகளை நிறைவு செய்ய முடியாது தவிக்கின்றனர். ஆயினும் மீனவ மக் கள் தமது இன்னல்களுக்கு உடனடி யாகத் தீர்வு வேண்டும் என வேண்டி நிற்கின்றனர். அவர்களின் கோரிக்கை முற்று முழுவதும் நியாயமானது -

ஆகவே இந்நாட்டின் அரச தலை வர் என்ற முறையில் இப்பிரச்சினை யில் உடனடியாக தலையிட்டு புரிந்து ணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் மீனவ சமூகத்தினர் தமது ஜீவனோ பாய தொழிலை தங்கு தடையின்றி செய்ய உடன் நடவடிக்கை எடுக்கு மாறு கேட்டுக்கொள்கின்றேன் - என் றுள்ளது.

இவ்விடயத்தில் தகுந்த நடவ டிக்கை எடுப்பதாக அமைச்சர் மகேஸ் வரனுக்கு பிரதமர் உறுதியளித்துள் ளார். (ஐ-3)

## சு.கட்சி பொதுச் செயலராக மைத்திரிபால சிறிசேன

கொழும்பு,ஜூன்9

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக பொலநறுவை மாவட்ட பொதுமக்கள் ஐக்கிய முன்ன ணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன, கட்சியின் நிறைவேற்றுக் குழுவினரால் ஏகமன தாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நேற்றுமுன்தினம் காலை யில் நடைபெற்ற கட்சியின் நிறைவேற் றுக் குழுக் கூட்டத்திலேயே இவர் தெரிவு செய்யப்பட்டார்.

கட்சியின் பொதுச்செயலாளராக முன்னர் பணியாற்றிய தற்போதைய அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா கடந்த வருடம் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து கொண்டதால் அப் பதவி வெற்றிடமாக இருந்து வந்தது. (ஐ-6-9)

### செவ்வாய்முதல் வியாழன்வரை
## மூன்று தினங்களுக்கு விசேட விமான சேவை

இரத்மலானைக்கும் பலாலிக்கும் இடையில் நாளைமறுதினம் செவ் வாய்க்கிழமை முதல் மூன்று தினங் களுக்கு தினமும் தலா ஒரு விசேட விமான சேவை நடத்தப்படவுள்ள தாக எக்ஸ்போ விமான சேவையின் யாழ். முகவர் அலுவலகம் அறிவித் துள்ளது.

மேற்படி விசேட விமான சேவை மூலம் பயணம் செய்ய விரும்புவர் களுக்கான பயணச் சீட்டுக்கள் தற் போது வழங்கப்பட்டு வருவதாகவும்-

இன்று விடுமுறை தினமாயினும் பயணச்சீட்டு விநியோகம் இடம் பெறும் என்றும் -

அறிவிக்கப்பட்டுள்ளது.

விசேட சேவைக்குப பயணச் சீட்டுப் பெறுபவர்கள் அந்த அந்தத் தினங் களில் முற்பகல் 11.30 மணிக்கு சமுகமளிக்க வேண்டும் என்றும் -

முகவர் அலுவலகம் அறிவித்துள ளது. (எ)

### கிரிக்கெட் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூன்9

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத் தினால், 12வயதுக்குட்பட்டவர்களுக் கான நீண்ட நாள் கிரிக்கெட் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பயிற்சி பெற விரும்புவோரை இன்று காலை 8 மணிக்கு யாழ். நாவலர் வீதியில் உள்ள கிரிக்கெட் அக்கடமிக்கு வருகை தருமாறு யாழ். மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் கேட் டுள்ளார். (எ-9)

ஜப்பான் தென்கொரியா
## உலகக் கிண்ண கால்பந்து
2002 FIFA WORLD CUP KOREA JAPAN
31.05.2002 - 30.06.2002




**இத்தாலி வீரர் பிரான்ஸிஸ்கோ டொடி பந்தை உதைக்கும் காட்சி அருகில் குரோஷிய வீரர் தோமஸ்.**

# இத்தாலி அணிக்கு அதிர்ச்சி தோல்வி!

சியோல்,ஜூன்9

நேற்று ஜப்பான் மற்றும் தென் கொரியாவில் இடம்பெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்டங்களில் பிரே ஸில், குரோஷியா, தென்னாபிரிக்க அணிகள் வெற்றிபெற்றுள்ளன. பிரே ஸில் - சீனா ஆட்டத்தில் பிரேஸில் பெரு வெற்றிபெற்றது. குரோஷியா எதிர் இத்தாலி ஆட்டத்தில் எதிர் பார்ப்புக்கு மாறாக இருமுறை உல கக் கிண்ணத்தை வென்ற இத்தாலி அணியை குரோஷியா வென்றது.

முதலாவது ஆட்டம் தென்கொரியா வுக்கும் ஸ்லோவேனியாவுக்கும் இடையே இடம்பெற்றது. 1-0 என்ற கோல் அடிப்படையில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றது. தென்னாபிரிக்க வீரர் ஸியாபொங்கா நொம்விதி அருமை யாகத் தலையால் மோதி அடித்த ஒரு கோல் அந்த அணிக்கு வெற்றி யைத் தேடித்தந்தது.

ஆட்டம் ஆரம்பமான 3ஆவது நிமிடத்தில் தென்னாபிரிக்க வீரர் குயின்டன் போர்டீன் அடித்த கட்டுப் பாடற்ற உதையை (Free-kick) நொம்விதி தலையால் மோதி கோல் அடித்தார். பதிலுக்கு கோல் அடிக்க முயன்ற ஸ்லோவேனிய வீரர்கள் முரட்டு ஆட்டத்தில் ஈடுபட்டனர். எனி னும் அவர்களின் முயற்சிகளை தென்னாபிரிக்க வீரர்கள் வெற்றிக ரமாக முறியடித்தனர்.

ஸ்லோவேனியா வீரர்களின் முரட்டு ஆட்டத்தை ஊக்குவித்தமைக்காக ஆட்டத்தின் 49ஆவது நிமிடத்தில் அணியின் பயிற்சியாளர் கடான்ஸ் அவரது ஆசனத்தில் இருந்து அதி காரிகளால் வெளியேற்றப்பட்டார். இறுதியில் 1-0 என்ற கோல் அடிப்படை யில் தென்னாபிரிக்க அணி வென் றது.

இரண்டாவது ஆட்டம் இத்தாலி - குரோஷிய அணிகளிடையே இடம் பெற்றது. ஆட்டத்தின் முதல் பாதி வரை இரு அணிகளும் மிக உக் கிரமாக மோதின. எந்த அணியும் கோல் அடிக்கவில்லை. பின் பாதி ஆட்டம் ஆரம்பித்த 5 நிமிடங்களில் -ஆட்டத்தின் 50ஆவது நிமிடத்தில் - இத்தாலியின் கிறிஸ்டியன் வீரி முதலாவது கோலை அடித்து தன் அணியை முன்னிலைப்படுத்தினார். ஆனால் 73ஆவது நிமிடத்தில் குரோஷிய அணி வீரர் இவிகா ஒலிக தன் அணி சார்பில் ஒரு கோலை அடித்து நிலைமையை சமநிலைக்குக் கொண்டு வந்தார். மீண்டும் மூன்றே நிமிடங்களில் குரோஷிய வீரர் மிலான ரபைக் திடீரென விதமாக ஒரு கோலை அடித்து வியப்பை ஏற்படுத் தினார்.

இம்முறை உலகக் கிண்ணத்தை கைப்பற்றக் கூடிய அணிகளில் ஒன் றாகக் கருதப்படும் இத்தாலி தோல் வியடைந்தமை ரசிகர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மூன்றாவது ஆட்டம் பலம் பொருந திய பிரேஸில் அணிக்கும் சீன அணிக கும் இடையே இடம்பெற்றது. 4-0 என்ற கோல் அடிப்படையில் பிரே ஸில் அணி இலகுவாகப் பெரு வெற்றி யீட்டியது.

ஆட்டம் ஆரம்பமான 15ஆவது நிமிடத்தில் பிரேஸில் அணிக்கு கிடைத்த கட்டுப்பாடற்ற உதையை அபாரமாகப் பயன்படுத்திய அந்த அணியின் பின்கள நட்சத்திர ஆட் டக்காரர் ரொபாட்டோ கார்லோஸ் முதலாவது கோலை அடித்தார். தொடர்ந்து 32ஆவது நிமிடத்தில் ரிவால்டோவும் 44ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி உதை மூலம் ரொனால்டினோவும் 54ஆவது நிமி டத்தில் நட்சத்திர வீரர் ரொனால் டோவும் கோல்களை அடித்தனர். இதனால் சீனா 0-4 என்ற கோல் அடிப்படையில் படுதோல்வியடைந்தது.




**கோல் அடித்த மகிழ்ச்சியில் டொனால்டோ.**

### இன்று நடக்கும் ஆட்டங்கள்

சியோல்,ஜூன்9

உலகக கிண்ண உதைபந்தாட் டப் போட்டிகளில் இன்று நடை பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள், போட்டி நடைபெறும் நாடு, நேரம்(உள்ளூர் நேரம்) என் பன வருமாறு:-

- மெக்ஸிக்கோ எதிர் ஈகுவடோர் (ஜப்பான் - பகல் 12.30)
- கொஸ்ராரிக்கா எதிர் துருக்கி (கொரியா - பகல் 3.00)
- ஜப்பான் எதிர் ரஷ்யா (ஜப்பான் - மாலை 5.30) (ம)




**பிரேஸில் கோல் காப்பாளர் மார்கோஸ் காற்றில் எம்பி பந்தை தட்டும் காட்சி.**

# அமரர் சிவசிதம்பரத்துக்கு அஞ்சலி....



மறைந்த தலைவர் முருகேசு சிவசிதம்பரத்தின் உடல் யாழ்நகரில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.ஆயர் அதி.வண தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன், வடபிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபர் கீர்த்தி கஜநாயக்கா, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் அன்னாரின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதைப் படத்திற் காணலாம்.



விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ்.மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் மற்றும் யாழ்.மநகராட்சி உறுப்பினர்கள், உலகத் தமிழர் பேரவைத் தலைவர் இரா.சனார்த்தனம் ஆகியோர் பூதவுடலுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: தேவராஜன்)*




கூட்டணி அலுவலகத்தில் இடம் பெற்ற இறுதி அஞ்சலிகளைத் தொடர்ந்து கரவெட்டியை நோக்கிய இறுதிப் பயணத்துக்காக தலைவர் மு.சிவசிதம்பரத்தின் உடல் வைக்கப்பட்ட பேழையைக் கூட்டணிப் பிரமுகர்கள் ஊர்தியில் வைப்பதற்கு எடுத்துச் செல்லும் காட்சி.

# சமாதான முயற்சி நடைபெறும் சமயம் முக்கிய தலைவரை நாடு இழந்துவிட்டது

## சிவாவின் மறைவுக்கு பிரமுகர்கள் இரங்கல்

**ஜயலத் ஜயவர்த்தனா**
**(புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர்)**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.சிவசிதம்பரத்தின் மறைவு இந்த நாட்டின் அரசியலில் ஒரு பாரிய இழப்பாகும். குறிப்பாக இரண்டு தசாப தமாகக் தொடர்ந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினை காரணமாக ஏற்பட்டிருந்த யுத்தசூழ்நிலைக்கு முடிவுகண்டு சமாதான முயற்சிகளை முன்னெடுத்து, அரசியல் தீர்வை நோக்கி நாடு முன்னேறிக்கொண்டிருக்கும்போது சிவசிதம்பரம் போன்ற தலைவர்களின் அனுபவம், அரசியல் வழிகாட்டல் எமக்கு கட்டாயமாகத் தேவைப்படுகிறது.

அமரர் சிவசிதம்பரம் தற்போதைய நாடாளுமன்றத்தில் மிக நீண்டகால அனுபவத்தை பகிர்ந்துகொள்ளவேண்டிய சூழலில் மறைந்தமை இளைய தலைமுறையினருக்கு ஒரு வகையில் ஏமாற்றத்தை ஏற்படுத்துகிறது. எவ்வாறெனினும் ஐக்கிய இலங்கையில் நிரந்தரமான அரசியல் தீர்வுகண்டு சகல இன மக்களும் சம உரிமைகளோடு வாழவேண்டும் என தன்னை அர்ப்பணித்த தலைவர் சிவசிதரம்பரத் தின் கனவு நனவாக நாம் பாடுபடுவோம்.

**கலாநிதி ந.குமரகுருபன்**
**(பொதுச்செயலாளர், அ.இ.த.காங்கிரஸ்)**

நாடாளுமன்ற உறுப்பினராக, சிம்மக்குரலோனாக, சிறந்த வழக்கறிஞராக, பிரதிச் சபாநாயகராக, சிங்களத் தலைவர்களும் மதித்த தமிழ்த் தலைவராக, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின்பொதுச் செயலாளராக, கட்சி அசியலுக்கப்பால் தமிழினத்தின் தேசிய போராட்டங்களில் சத்தியாக்கிரகங்களில் பங்குகொண்டு தனது வாழ்நாளில் அரை நூற்றாண்டு காலம் தமிழர் அரசியலோடு பின்னிப்பிணைந்து திகழ்ந்த மூதறிஞர் சிவா, தேசியப் பட்டியலில் நாடாளுமன்ற உறுப்பினராய் கௌரவிக்கப்பட்டபோது தனது தள்ளாத வயதிலும் தனக்கு சரியெனப்பட்டதை அரசாங்கம் சம்பந்தப்பட்ட விடயமானால் என்ன? அமெரிக்கா சம்பந்தப் பட்டாலென்ன? தமிழகம் சம்பந்தப் பட்டலாலென்ன ஆணித்தரமாகவும் பகிரங்கமாகவும் தெரிவித்தவர் இவர்.

**தி.மகேஸ்வரன்**
**(இந்து சமய விவகார அமைச்சர்)**

ஈழத் தமிழ் மக்களின் வரலாற்றில் ஆழ்ந்த அரசியல் ஞானமும், ஆளுமையும் நிறைந்த அமரர் சிவசிதம்பரம், இந்நாட்டு இந்துமக்கள் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டு வந்துள்ளமை தனிச் சிறப்பாகும். அமரர்களான ஜீ.ஜீ.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் போன்ற தமிழ்த் தலைவர்களின் பாசறையில் வளர்ந்த அமரர் சிவசிதம்பரம் தமிழ் மக்களின் பல்வேறு போராட்டங்களில் வகித்துவந்துள்ள பங்கு தனித்துவம் வாய்ந்தது. அசாதாரண பேச்சாற்றல் மிகுந்த சிவசிதம்பரம், தமிழர்களின் உரிமைக்காகப் போராடிய இளைஞர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிடியில் சிக்கித் தவித்தபோது அவர்களுக்காக மாதக்கணக்காக நீதிமன்றங்களில் இலவசமாக வாதாடிப் பல சாதனைகளைப் புரிந்துள்ளமையை இச் சந்தர்ப்பத்தில் நாம் நினைவு கூருதல் பொருத்தமாகும்.

அமரர் சிவசிதம்பரம் பல தசாப்தங்களாக அரசியலில் தன்னை அர்ப்பணித்து பல தியாகங்களை செய்துள்ளார். அவர் தூய்மையுடன் செயலாற்றி தமிழ் மக்களுக்காகவும், இந்து சமய வளர்ச்சிக்காகவும் குறிப்பிடத்தக்க தொண்டுகளைச் செய்திருக்கின்றார். இந்து இளைஞர்களின் தலைவராக ஒரு காலகட்டத்தில் தலைநகரில் செயற்பட்டது குறிப்பிடத்தக்கது. 1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தமிழாராய்ச்சி மாநாட்டில் அவர் வகித்த பங்கு மெச்சத்தக்கது.

**அ.விநாயகமூர்த்தி**
**(யாழ்.மாவட்ட நா.ம. உறுப்பினர்)**

தமிழரைப் பொறுத்தமட்டில் எம்.சிவசிதம்பரத்தின் மறைவு இந்த நேரத்தில் ஈடுசெய்ய முடியாததாகும். அனுபவம் வாய்ந்த முதுபெரும் தலைவரை நாம் இழந்து நிற்கின்றோம். அவர் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் பொதுக் காரியதரிசியாக செயலாற்றி மாபெரும் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்துக்கு பக்கபலமாக இருந்தவர்.

ஆங்கிலத்திலும், தமிழிலும் நல்ல பேச்சாளனாக விளங்கியவர். தான் சரியென்று நினைத்ததை அஞ்சா நெஞ்சத்துடன் எந்த இடத்திலும் சொல்லக்கூடிய வல்லமை படைத்தவராக இவர் காணப்பட்டார்.

**செ.பத்மநாதன்**
**(தலைவர், அபிவிருத்தி நல உரிமைச்சங்கம், யாழ்.மாவட்டம்)**

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் தமிழ் பேசும் மக்களின் துயர் துடைக்க பல அரசியல் எதிர்ப்புகளுக்கும் முகம் கொடுத்து நாடாளுமன்றத்திலும் வெளியிலும் குரல்கொடுத்த சிங்கம் அடங்கிவிட்டது. ஒரு சிலகாலம் சுகவீனம் காரணமாக இந்தியாவில் தங்கியிருந்து வைத்தியம் செய்த காலத்திலும், இலங்கை வாழ்.மக்களின் துயரங்களையும் அபிலாசைகளையும் கட்சியின் உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி மூலம் தொடர்பு கொண்டு அறிந்து கண்ணீர் வடித்ததை மறக்க முடியாது.

இலங்கை வாழ் தமிழ் மக்களின் வேண்டுகோளுக்கு அமையவும், இந்தியாவில் வாழும், தமிழ் மக்களுக்காகவும் உலகில் வாழுகின்ற புலம் பெயர்ந்தவர்களுக்காகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வேண்டுகோளுக்காகவும் மீண்டும் இலங்கை வந்து நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

**கோபாலகிருஷ்ண காந்தி**
**(இலங்கைக்கான இந்தியத் தூதுவர்)**

திரு.மு.சிவசிதம்பரத்தைப் பற்றி தனிப்பட்ட முறையில் நேரடியாக அறியாதுவிட்டாலும் இலங்கையில் அரசியல் பொது வாழ்க்கையில் அவர் வகித்த முக்கியபங்கை நன்கறிந்துள்ளேன். சிறுபான்மையினரது அபிலாசைகளை இலங்கை நாடாளுமன்றத்தில் அவர் சிறப்பாகப் பிரதி நிதித்துவப்படுத்தியவராவார். ஆயிரம் இடையூறுகள் வந்த போதும் சமாதானத் தீர்வுக்காக இறுதிவரை அவர் பாடுபட்டுவந்தார். (எ-ஓ)

# உடுப்பிட்டிச் சிங்கத்துக்கு கவிதைகளால் அஞ்சலி !

## சிவசிதம்பரனார் புகழ் வாழி!

படித்தறியா பாமரக் கிழவன்கூட
பண்பாளன் சிவசிதம்பரம் பேச்சைக் கேட்பின்
துணிவு பெற்று தூய தமிழ் வீரனாகி
அடித்துரத்து ஆவேசம் மிகவேகொண்டு
அன்னை தமிழ் காத்திடவே அணிதிரட்டி
முடிவிலா தமிழ் வீரம் முழுதால் பொங்க
முன்நின்று தன்னுயிரை தருவேன் என்று
இடித்துரைத்து தன் இன்னுயிரை ஈவானாகில்
இவர் புகழை இயம்பிடவே இங்கு யார்தான் உண்டு?

- விகடகவி.

## தமிழ் மண் தவிக்குதையா!

எம் விழிகளைத் திறந்து விட்ட
வேந்தரே! தமிழினத்தார்
எழில் வாழ்வு காணுதற்கே
எத்தனை கனவு கண்டீர்?
மொழிகாக்க வழியைக் காக்க
மூச்சுடன் பேச்செல்லாம்
உழைத்திட்ட சிவசிதம்பரம் ஐயாவே
உன்னை இழந்து தமிழ்மண் தவிக்குதையா!

அண்ணலே! தமிழர் நெஞ்சின்
அணையாத சுடரே! மூச்சே!
எண்ணமே எழிலே! எங்கள் தலைவா!
ஏழையர் முதலே! இந்த
மண்ணகம் செழிக்க வந்த
மழையே! மாண்புயர் தமிழர்திலகமே
வண்ணமே வழியே! எங்கள்
வரலாறே! மறப்ப துண்டா?

- மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்.

## தேவை

இரும்புப் பெட்டி
*[IRON SAFE]*

60 செ.மீ x 60 செ.மீ x 60 செ.மீ அளவு அல்லது சற்றுக்கூடிய இரும்புப்பெட்டி தேவை.
உடன் தொடர்பு கொள்ளவும்.
விளம்பர இல:- 1536,
மே/பா உதயன்.
(விளம்பரப் பகுதியில் நேரடியாக வந்து சந்திக்கலாம்) (C.22451)


## கண்ணீர் அஞ்சலி

உடுப்பிட்டிச் சிங்கம் உறங்கிவிட்டது!
சிம்மக் குரல் ஓய்ந்துவிட்டது!!



அமரர்
**மு.சிவசிதம்பரம்**

அவர்களது மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்.

S.V.முருகேசு ஸ்தாபன உரிமையாளரும், ஊழியர்களும்.

*154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.* (C/22452)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

பூசனை ஈசனார்க்கு பொழுதெலாம் செய்து வாழ்ந்த



| தவப்பேறு | சிவப்பேறு |
|---|---|
| 08 | 23 |
| 08 | 05 |
| 1932 | 1998 |

**அமரர் சுப்பையா ஆறுமுகராசா**

*திதி:- 09.06.2002*

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து
மானிட வாழ்வை நீத்த - அத்தா
இனிக் காண்பது எங்கே?

*பிரம்படி, கொக்குவில்.* (4670) அன்பு மனைவி சரோஜினிதேவி ஆறுமுகராசா

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| உதயம் | அஸ்தமனம் |
|---|---|
| 26 | 10 |
| 05 | 05 |
| 1933 | 2002 |

**திருமதி பொன்னம்பலம் தவமணி**

அன்போடும் பண்போடும் வாழ்ந்த உங்களை
எங்களால் மறக்க முடியவில்லையே!
அன்பு முகம் மறைந்து ஆனதே திங்களொன்று.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
மஞ்சவனப்பதி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* - குடும்பத்தினர். (4669)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
அ.ரகுபதியின் அன்புத் தந்தையார்
**கந்தையா அம்பலவாணர்**

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டிநிற்கும்:

*19ஆம் அணியினர்,*
*மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.*

(4671)

### லங்கா சிமெந்து நிறுவன ஊழியருக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்9

லங்கா சிமெந்து நிறுவன நஷ்ட ஈட்டு திட்டத்தில் இணைந்து நஷ்ட ஈடு பெற்றுக்கொண்ட அனைத்து முன்னாள் ஊழியர்களினதும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியை மீளப் பெறுவதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட ஊழியர்கள் அனைவரும் விண்ணப்பப் படிவத்தினை இணுவிலில் இயங்கிவரும் நிறுவனத்தின் தற்காலிக அலுவலகத்தில் பெற்று உடனடியாக விண்ணப்பிக்கும்படி கேட்டுகொள்ளப்பட்டுள்ளனர்.(எ-ரி)

### மீண்டும் பாதீனியம் பரவுகிறது

யாழ்.குடாவின் ஈவினை, நவக்கிரி போன்ற பகுதிகளிலுள்ள விவசாய விளைநிலங்களில் பாதீனியம் பற்றையாக வளர்ந்து காணப்படுகிறது.

மேலும் மஸ்கன் - நிலாவரை வீதி ஓரங்களிலும் காணப்படும் இப் பாதீனியக் களைகள் அகற்றப்படாவிடின் விளை நிலங்களின் வளங்கள் குன்றிப் போவதுடன் பயிர்களும் பாதிப்புக்குள்ளாகும் நிலை தோன்றும் எனக் கூறப்படுகிறது. (ஏ-13-69)

### இறை தியானக்குழுவின் வழிபாடுகள் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,ஜூன்9

யாழ்.இறைதியானக் குழுவினின் ஏற்பாட்டில் இறை தியான குணமாக்கல் வழிபாடுகள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 18 ஆம் திகதி முதல 23 ஆம் திகதி வரை கிளிநொச்சி, முல்லைத்தீவு மறைக் கோட்டத்திலும் 24ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை யாழ்.மறைக் கோட்டத்திலும் நடைபெறவுள்ளன.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து இறைதியான வழிபாடுகளை நடத்திய இந்தியாவின் போட்டா ஆச்சிரம வழி காட்டிகளாகிய அருட்திரு. அகஸ்ரின் முண்டக்கட், சகோ.ஜோர்ஜ் தரகன் ஆகியோர் அடங்கிய குழுவினர் இவ்வழிபாடுகளை நடத்துவர்.(எ-8)

### திறப்புவிழா

காரைநகர்,ஜூன்9

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்தில் மீள் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கட்டங்களின் திறப்பு விழா இன்று காலை 9.00 மணிக்கு அதிபர் ஆ.குமரேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், பாடசாலை முன்னாள் அதிபர் கே.கதிரவேலு, அகதிகளுக்கான ஐ.நா.தூதரக சிரேஷ்ட வெளிக்கள உத்தியோகத்தர் பிபால கிருஷ்ணன், பொருட் திட்ட இணைப்பாளர் என்மூர்த்தி, ஜி.ரி.இசற் தொழில் நுட்ப உத்தியோகத்தர் எஸ்.புஸ்பநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.(எ-73)


ஜெசித்தாராவின்
புதிய கேரளத் தயாரிப்பு
குங்குமப்பூ புரியாணி.
&
சிலி சிக்கன்
அதிக சுவை
புதுப் பொலிவுடன்

ஜோ.எகட்டனின் ஜெசித்தாரா

19/3, கஸ்தூரியார் மகளிர் கல்லூரி ஒழுங்கை, கஸ்தூரியார், யாழ்ப்பாணம். (4672)



ENGLISH
SPOKEN AND GRAMMAR
புதிய பிரிவு ஆரம்பம்
By: BRITTO
இடம்: கொக்குவில்
(குமரன்தோட்டம் சாலைக்கருகில்)
காலம்: 12.06.2002
புதன்கிழமை
நேரம்: காலை 8.30 மணி (மு.ப.)
(C/22449)


## முதல் திங்கள் இறுதிநாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்தி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 20 | 11 |
| 06 | 05 |
| 1915 | 2002 |

**திருமதி பொன்னம்மா செல்லையா**

(கோவிலாக்கண்டி)

அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்த எங்கள் அன்பு அம்மாவே! அம்மம்மாவே! மாமியே!
அன்பின் சிகரமாய் திகழ்ந்து பண்பாய் எம்மை வளர்த்து இன்று எம்மைப் பாதியில் பரிதவிக்க விட்டனையோ?
ஆண்டு பல சென்றாலும் மறப்போமோ உம்மை?

எங்கள் அன்புத் தெய்வத்தின் பிரிவுத்துயர்கேட்டு எம்முடன் தொலைபேசியிலும், கடிதத்திலும் நேரில் வந்தும் எமக்கு ஆறுதல்கூறி, இறுதி ஊர்வலத்திலும் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (09-06-2002) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் (ஆவரங்கால்) நடைபெறும் ஆத்ம சாந்தி, வீட்டுக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செ.அருளானந்தம் (மகன்),
வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால். (4671)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி குணரத்தினம்

(அரியாலை ஸ்ரீ சித்தி விநாயகர்ஆலய ஓதுவார்)

அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி குணரத்தினம் 07.06.2002 வெள்ளிக்கிழமை கொழும்பில் சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியினரின் ஏக புதல்வனும் காலஞ்சென்ற திருமதி ராசலட்சுமி குமாரசாமி மற்றும் திருமதி கமலாம்பிகை புறாடி ஆகியோரின் அன்புச் சகோதரனும் வாமதேவா (U.K.), இராஜேஸ்வரி (U.K.), மகாதேவா (Canada), ஜெயதேவா (U.K.), கருணாசலதேவா (Australia), Dr.தேவகி (U.K.), வாசுதேவா (U.K.) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-06-2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு இல.591, காலி வீதி, கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் அன்டர்சன் வீதி, தெகிவளை நெதிமாலா இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*52, பெர்னார்டு வீதி, வெள்ளவத்தை.* (C/22444) தகவல்: திருமதி கமலாம்பிகை புறாடி.

### திருமதி ஒப்பிலா கனகசிங்கம்

(NEE வேதாபரணம்)

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ். இராமநாதன் கல்லூரி)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஓய்வுபெற்ற யாழ்.இராமநாதன் கல்லூரி ஆசிரியையுமான திருமதி ஒப்பிலா கனகசிங்கம் அவர்கள் 05-06-2002 புதன்கிழமை ஒட்டாவா கனடாவில் ஆண்டவனின் மகிமைக்குள் பிரவேசித்தார்.

அன்னார் ஓய்வுபெற்ற நில அளவையாளர் கந்தையா ஜோன் கனகசிங்கத்தின் அருமை மனைவியும் யூலியா, அல்பிரெட் ஆகியோரின் அன்புத் தாயாரும் தனுராஜ்ஜின் அன்பு மாமியாரும் ஸ்ரெபன், அன்றூ ஆகியோரின் அம்மம்மாவும் காலஞ்சென்ற தர்மசீலன், ஆனந்தராஜன் (ரொறன்ரோ), அமிர்தரட்ணம் (U.K.), மனோரஞ்சன் (U.K.), அருள்ஜோதி (ரொறன்ரோ) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தபோ, லில்லி, மெல்கியோர், சாந்தி, காமினி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை நேற்று (08-06-2002) சனிக்கிழமை காலையில் கனடாவில் நடைபெற்றது.

தகவல்:
கனகசிங்கம் குடும்பம்
20, CREMONIAL DRIVE APT#114,
MISSISSAUGA, ONTARIO,
L5R 3E5,
CANADA.
T.P. No. 001 905 712 3418 (C/22445)

### சின்னவி செல்லத்துரை

(தனியார் சங்கக்கடை உரிமையாளர்)

சண்டிலிப்பாய், தொட்டிலடியைச் சேர்ந்தவரான சின்னவி செல்லத்துரை அவர்கள் 05.06.2002 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சண்டிலிப்பாயைச் சேர்ந்த சின்னவி தம்பதிகளின் புத்திரனும் புஷ்பராணியின் அன்புக்கணவரும் மகிழ்ராஜா (சுவிஸ்), ரவீந்திரன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்றவர்களான செல்லமா, அப்பையா, சின்னத்துரை மற்றும் பொன்னம்மா, இராசம்மா, ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற இலட்சுமி மற்றும் சுபத்திரை, மகேஸ்வரி காலஞ்சென்ற தெய்வானை மற்றும் பூபதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுகந்தி (சுவிஸ்), தாமரைச்செல்வி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுவேதன், அதிசயா, ஜரீஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாளிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொட்டிலடி, சண்டிலிப்பாய். (4662)
தகவல்: மகிழ்ராஜா (சுவிஸ்), ரவீந்திரன் (நோர்வே) } மக்கள்

உதயன்

## மீனவர்கள் போராட்டம்

மீனவர்களின் மறியற்போராட்டம் கடந்த வியாழன் முதல் மீண்டும் ஆரம்பமாகிவிட்டது. யாழ்.செயலகத்துக்கு முன்னால் மீனவர்கள் சுலோக அட்டைகளைத் தூக்கிப் பிடித்தவண்ணம் நின்று செயலகத்தை முற்றுகையிட்டனர்.

செயலகப் பணியாளர்களால் உள்ளே செல்ல முடியவில்லை. அவர்கள் காத்திருந்து பார்த்து விட்டு வீட்டுக்குத் திரும்பிவிட்டனர். அரசாங்க செயலகத்தில் பணிகள் ஒன்றும் நடைபெறவில்லை.

மீனவர்களின் மறியற்போராட்டத்தால் யாழ். செயலகம் ஸ்தம்பிதம் அடைந்தது, இது முதற்றடவை அல்ல.

அரசாங்கச் செயலகம் ஒருநாள் செயலிழந்தால் ஏற்படும் நஷ்டம் எவ்வளவு? மக்கள் எவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கும்? இவற்றை ஆட்சி நடத்துபவர்கள் எண்ணிப் பார்த்ததாகத் தெரியவில்லை. ஒவ்வொரு முறையும் மீனவர்களின் மறியற்போராட்டம் நடக்கும்போது வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

மீனவர்கள் என்ன வீம்புக்கா போராட்டம் நடத்துகிறார்கள்? அவர்கள் மீது குறை சொல்ல முடியாது; அவர்கள் வேறு வழியின்றித்தான் செயலக மறியற்போராட்டத்தில் இறங்குகிறார்கள்.

"எங்களைக் கடலில் சுதந்திரமாக மீன்பிடிக்க விடுங்கள். கரையோரப் பகுதிகளில் எங்கள் இருப்பிடங்களில் தங்கியிருக்கும் படையினரை உடனடியாக அங்கிருந்து வெறியேற்றுங்கள்" இவற்றைத்தான் மீனவர்கள் கேட்கிறார்கள்.

அரசாங்கத் தடைகளாலும் கட்டுப்பாடுகளாலும் மீனவர்களின் மீன்பிடித்தொழில் பாதிக்கப்படுவது அவர்களின் வாழ்க்கைப் பிரச்சினை; வயிற்றுப் பிரச்சினை. ஒருநாள் அவர்கள் மீன்பிடிக்கச் செல்லாவிட்டாலும் வீட்டில் அடுப்பு எரியாது. எல்லோரும் பட்டினி கிடக்க நேரிடும். அந்தளவு வறுமை. அப்படியிருக்க, அரசு பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி அவர்களை வாட்டலாமா?

அரசும் புலிகளும் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையில் 2:11 பிரிவில் மீன்பிடித்தடை பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வரும்(24.02.2002) நாளிலிருந்து மீன்பிடித்தல் தொடர்பான கட்டுப்பாடுகள் படிப்படியாகத் தளர்த்தப்படும்.

யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வருகின்ற நாளில் இருந்து 90 நாள்களுக்குள் கீழ்க்கானும் விதிவிலக்குகளுக்கு அமைவாக பகலிலும் இரவிலும் மின்பிடிப்பதில் உள்ள அனைத்துக் கட்டுப்பாடுகளும் நீக்கப்படும்.

1. கரையோரங்களில் உள்ள பாதுகாப்புப் படை முகாம்களின் இரு பக்கமும் ஒவ்வொரு கடல்மைல் தூரத்திற்குள்ளும் கடல் பக்கமாக இரண்டு கடல்மைல் தூரத்திற்குள்ளும் மீன்பிடித்தல் அனுமதிக்கப்படமாட்டாது.

2. கரையோரமாக உள்ள துறைமுகங்களுக்குள்ளும், துறைமுக வாயில்களிலும், குடாக்களிலும், முகத்துவாரங்களிலும் மீன்பிடித்தல் அனுமதிக்கப்படமாட்டாது.

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து 100 நாள்களுக்கு மேலாகியும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மீன்பிடித்தல் தடைகள், கட்டுப்பாடுகள் ஆகியவை நீக்கப்படவில்லை.

உடன்படிக்கையில் இடம்பெற்றுள்ள விதிவிலக்கு அம்சங்களில் அரசு புகுந்து விளையாடிவிட்டது. சமீபத்தில் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அரசாங்க வர்த்தமானி அறிவித்தலின்படி கட்டுப்பாடுகள் இறுக்கமாக்கப்பட்டுள்ளன. கட்டுப்பாட்டுப் பகுதிகள் விஸ்தரிக்கப்பட்டும் உள்ளன.

மொத்தத்தில் மீனவர்கள் இரவும் பகலும் சுதந்திரமாக மீன்பிடித்தலில் ஈடுபட வழிசெய்யப்படவில்லை.

கடந்த புதன்கிழமை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தபோது, மீனவர்களின் பிரச்சினையை அவரின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்ற நம்பிக்கையை கூட்டமைப்பினரிடம் வளர்த்து அவர்களைத் திருப்பியனுப்பினார் பிரதமர்.

கஷ்டத்தை அனுபவிப்பவர்கள் மீனவர்கள். அவர்கள் நம்பிக்கைகளால் வயிற்றை நிரப்பிக் கொள்ளமுடியுமா?

மீன்பிடித் தடை விடயத்தைப் பாதுகாப்பு அடிப்படையில் அணுகும் அரசு, மனிதாபிமான அடிப்படையை முக்கியமாகக் கருத்திற்கொள்ளவேண்டும்.

# தகாத செயல்புரியும் இளைஞரை இனங்கண்டு உரிய நடவடிக்கை!

## புலிகள் பிரதிநிதி இளம்பரிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்9

கடந்த காலங்களில் தகாத சேஷடைகளில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலானவர்கள் தவறை உணர்ந்து திருந்திவரும் நேரத்தில் ஒருசிலர் தொடர்ந்தும் அத்தகைய செயல்களில் ஈடுபட்டுவருகின்றனர். அவர்களை இனங்கண்டு வருகின்றோம்.

- இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி.

அவர் மேலும் தெரிவித்தாவது:-

தற்போது காடைத்தனங்களில் ஈடுபட்டுவரும் இளைஞர்கள் பற்றிய விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. விரைவில் அவர்கள்மீது நிதானமானதும், இறுக்கமானதும், தேவையானதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

எமது இனத்தின் இருப்பையும், போராட்ட வலுவையும் உறுதி செய்துகொள்ளும் வகையில் இளைய சமூகத்தின் பொறுப்புமிக்க செயற்பாடுகள் எதிர்பார்க்கப்படுகின்ற இவ்வேளையில், ஒருசில இளைஞர்களின் கட்டுமீறிய தகாத செயற்பாடுகள் சகித்துக்கொள்ளப்படமுடியாதவை ஆகும்.

- என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-9)

# காரைதீவு அதிரடிப் படையினருக்கு மனிதஉரிமைக்குழு அழைப்பாணை

காரைதீவு,ஜூன்9

காரைதீவு விசேட அதிரப் படைமுகாம் பொறுப்பதிகாரி உட்பட படையினருக்கு எதிர்வரும் 17ஆம் திகதி ஆஜராகுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு அழைபாணை அனுப்பியிருக்கிறது. வீரமுனைக்குச் சென்று சவப்பெட்டி அச்சுறுத்தல் விடுத்தனர் எனக் கூறப்படுவது தொடர்பாகவே இந்த அழைப்பாணை அனுப்பப்பட்டது.

மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய ஆணையாளர் இரா.மனோகரன், வீரமுனைக்குச் சென்று அச்சுறுத்தல் குறித்து மக்களைச் சந்தித்து வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டார்.

அவை மனித உரிமை ஆணைக்குழு தலைமையகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. அதையடுத்தே ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டது.

அழைப்பாணை நேற்றுமுன்தினம் விசேட தபால்மூலம் அனுப்பிவைககப்பட்டது என்று இரா.மனோகரன் தெரிவித்தார். மேலும் காரைதீவு இளைஞர்கள் நால்வரைத் தாக்கிய சம்பவமும் மனித உரிமை ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

(ஐ)

# அம்பாறை மாவட்ட நிலைகுறித்து கரிகாலன் காரைதீவில் ஆராய்வு

காரைதீவு,ஜூன்9

தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை - மட்டக்களப்பு மாவட்ட சிறப்பு அரசியல் பொறுப்பாளர் எஸ்.கரிகாலன் நேற்று முன்தினம் காரைதீவுக்கு விஜயம் செய்தார்.

கரிகாலனுடன் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பாவா, இராணுவத் தளபதி ஸ்ரான்லி, மகளிர் அணி உறுப்பினர் பலரும் வந்திருந்தனர்.

காரைதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் சிறப்புக் கூட்டமொன்று நடைபெற்றது.

காரைதீவு பிரதேச செயலர் எஸ்.இராமகிருஷ்ணன், நாவிதன்வெளிப் பிரதேச செயலர் எம்.கோபாலரத்தினம், ஆலையடிவேம்பு பிரதேச செயலர் எஸ்.அருள்ராஜா, திருக்கோயில் பிரதேச செயலர் ஏ. கே.தவராஜா, கல்முனை (தமிழ்) பிரதேச செயலர் வி.அழகரத்தினம், கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ்.கே.ஆனந்தராஜா உட்பட பல பிரமுகர்கள் அதில் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தின் இன்றைய நிலைகுறித்து விரிவாக ஒருமணிநேரம் கலந்துரையாடப்பட்டது. சமூக பொருளாதார அரசியல் பிரச்சினைகள் அங்கு ஆராயப்பட்டன.

புரிந்துணர்வு உடன்படிக்கை முறையாக அமுல் செய்யப்படுவதில் தமது பங்களிப்பு பூரணமாக இருப்பதாக கரிகாலன் குறிப்பிட்டார்.

பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தில் கரிகாலன் கிறீம் கிரேகர் பிஸ்கட் பெட்டியை பணம் கொடுத்து வாங்கிக்கொண்டார்.

இதேவேளை - காரைதீவு விஷேட அதிரடிப் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் பரவலாகக் காணப்பட்டன. (ஐ)

# பாஷையூர் அந்தோனியார் தேர்ப்பவனி இம்முறை பழையபூங்கா வீதி ஊடாக

## 12 ஆண்டுகளின் பின்னர் நடைபெறுகிறது

கொழும்புத்துறை,ஜூன்9

பாஷையூர் புனித அந்தோனியாரின் தேர்ப்பவனி 12 வருடங்களின் பின்னர் இம்முறை பழைய பூங்கா வீதி வழியாக நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறும் திருவிழாவில் காலை 5.30 மணிக்கு முதல் திருப்பலியும், 7 மணிக்கு யாழ்.ஆயர் தலைமையில் திருவிழா கூட்டுத்திருப்பலியும் நடைபெறும்.

அன்று மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும் தேர்ப்பவனி பாசையூர் கடற்கரைவீதி, கொய்யாத்தோட்டம புது வீதி, பழைய பூங்கா வீதி, ஈச்ச மோட்டை வீதி, புங்கங்குளம் வீதி வழியாக ஆலயத்தை அடையும் என பங்குத்தந்தை தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆலய முன் மைதானத்தில் இடம்பெற்று வந்த தேர்ப்பவனி இம்முறை நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான சூழலை அடுத்து வழமைபோல் வீதியூடாக நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.(ம-ரி)

## ஜூலைமுதல் தனியார் பஸ் கட்டணம் உயர்வு

கொழும்பு,ஜூன்9

ஜூலை முதலாம்திகதி தனியார் பஸ் கட்டணங்களை 15 சதவீதத்தால் அதிகரிப்பதென்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. போக்குவரத்துச் சபை பஸ் கட்டணங்களோ, ரயில் கட்டணங்களோ அதிகரிக்கமாட்டா.

டீசல் விலை உயர்வால் பஸ் உரிமையாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பொருளாதாரக் கஷ்டங்களை கவனத்தில் கொண்டே தனியார் பஸ் கட்டணங்களை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டது என்று அமைச்சர் உபாலி பியசோம தெரிவித்தார்.

கட்டணங்கள் அதிகரிக்கப் பட்டாலும் ரூபா3, ரூபா4 கட்டணங்களில் மாற்றமில்லை.

(ஐ)

### நாளை

வைகாசி 27
திங்கட்கிழமை
(10.06.2002)
திதி : அமாவாசை
வைகறை 5.47 வரை.
நட்சத்திரம்: ரோகிணி
நள்ளிரவு 12.55 வரை.
அமாவாசை விரதம்
சுபநேரம் : 11.52 - 1.22
ராகுகாலம்: 7.22 - 8.52
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சமூகத்தில் வாழ்க்கையைப் பற்றிய கவலையை தீர்த்தாலே மூடநம்பிக்கைகளை ஒழிக்கமுடியும்.

# சமாதானம் வந்துவிட்டால் சிங்கப்பூராகிவிடும் இலங்கை

## இப்படிக் கூறுகிறார் அமெரிக்கத் தூதர்

கொழும்பு,ஜூன்9

சமாதானம் நிலைநாட்டப்பட்ட மறுகணமே இலங்கை மற்றொரு சிங்கப்பூராகத் திகழும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸ் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகள் தொடர்பாகக் கருத்துக் கூறியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமெரிக்கத் தூதுவர் மேலும் கூறியதாவது:-

உயர் தொழில்நுட்பம், கப்பல், விவசாயம் போன்ற தொழில் துறைகளில் இலங்கை வளரும் சாத்தியங்கள் தென்படுகின்றன. ஆனால், மோதல்கள் முடிவடைந்து சமாதானம் ஏற்படும் வரை வெளிநாட்டு உதவிகளோ, முதலீடுகளோ சரியான முறையில் பயன்தராது.

பிரச்சினை தீர்ந்து மிகவும் முன்னேற்றகரமான பாதையில் இலங்கை செல்லும் சந்தர்ப்பம் இப்போது உருவாகியுள்ளது. அமெரிக்கர்கள் இலங்கைத் தமிழர்கள் மீது அக்கறை கொண்டுள்ளனர். விடுதலைப் புலிகள் தமது கடும்போக்கால் சில இடங்களில் தவறிழைத்துள்ளார்கள். எனினும், தற்போது திருப்திகரமான ஒரு முடிவு வரும் என்ற நம்பிக்கை இலங்கை மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது.

இந்த நம்பிக்கை அமெரிக்காவையும் திருப்திப்படுத்துவதாக உள்ளது - என்று அவர் தெரிவித்தார். (ஒ-12)

# யாழ். மருத்துவமனையில் உள்ளகத்தொடர்பு சீரானது

யாழ்ப்பாணம்,ஜூன்9

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த சில நாள்களாக இயங்காதிருந்த தொலைபேசி உள்ளகத் தொடர்பு இணைப்புக்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

தொலைபேசி இணைப்புக்களை ஒன்றிணைக்கும் கருவி பழுதடைந்ததால் உள்ளக இணைப்புகள் துண்டிக்கப்பட்டிருந்தன. இதனையடுத்து கொழும்பில் இருந்து புதிய கருவி தருவிக்கப்பட்டுப் பொருத்தப்பட்டதைத் தொடர்ந்து உள்ளக இணைப்புகள் இயங்க ஆரம்பித்துள்ளன. (ம-13)

## அம்மைநோயால் பல்கலைக்கழகம் மூடப்பட்டது!

கொழும்பு,ஜூன்9

அநுராதபுரத்தில் உள்ள ராஜரட்டை பல்கலைக்கழக மாணவர்களிடையே அம்மைநோய் பரவியதை அடுத்து அப்பல்கலைக்கழகம் மூடப்பட்டது.

சுமார் எட்டு மாணவர்களுக்கு இந்நோய் பரவியதால் பல்கலைக்கழகத்தை மூடுவதென்று உபவேந்தர் தீர்மானித்தார் என்று அறிவிக்கப்பட்டது. விடுதிகளில் உள்ள அனைத்து மாணவர்களும் வெளியேறுமாறு கேட்கப்பட்டனர். (ஐ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தரமான புறொயிலர் பேட்டுக் குஞ்சுக்கான பிறிமா, பகிறா, செலான் பண்ணைகளின் கோழிக்குஞ்சுகளைப் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். நிதானமான விலைகளிலும் தரமான குஞ்சுகளை வரன், தரைமார்க்கமாகத் தொடர்ந்து குறைந்த விலைகளில் வழங்கி வருகின்றோம். தொடர்பு: தம்பிப்பிள்ளையும் மைந்தரும், No.343, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். T.P.3353. (4532)

யாழ்ப்பாணத்தில் கச்சேரி, பரியோவான் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் 7 படுகையறை, 2குளியலறை, நன்னீர்க் கிணறு, பல வாகனங்கள் தரிக்கக் கூடிய இடவசதியுடனும் மற்றும் பல வசதிகளுடனும் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. வெளிநாட்டு நிறுவனங்களுக்கோ, ஹோட்டலுக்கோ உகந்தது. தொடர்பு: 021-2880. (4569)

கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் 18 பரப்பு பயன்தரும் மரங்களுடன் சகல வசதிகளும் கொண்ட கல் வீடும், காணியும் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு. தொடர்பு: 70(34), கோயில் வீதி, யாழ்ப்பாணம். (4597)

இரண்டு மாத வயதுடைய அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ப.குகறாஜன், சங்கரத்தை, வட்டுக்கோட்டை. (4625)

45 நாள்கள் நிரம்பிய, பூச்சி நீககப்பட்ட டாசோன் (Dashound) நாய்க் குட்டிகள், மணித்தாரா, அதன் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 67/43, தர்மலிங்கம் அவெனியூ, கொட்டடி, யாழ்ப்பாணம். (4621)

மல்லாகம், புகையிரத நிலையத்திற்கு அருகில் வீடு வளவும், ஏழாலை கத்தோலிக்க தேவாலயத்திற்கு அருகில் கிணற்றுடன் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிவலோஜினி சுப்பிரமணியம் (ராதா), மயிலங்காடு, ஏழாலை தெற்கு, சுன்னாகம். கொழும்புத் தொடர்பு: தொலைபேசி: 01-595844. (சி-22430)

கடைப் பாவனைக்கு உகந்த மர சோக்கேஸ் விற்பனைக்கு உண்டு. ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் பார்வையிடலாம். தொடர்பு: ச.சிவா, 93/23, இந்து மகளிர் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (4601)

முதிரையாலும், மகோக்கனியாலும் சேர்ந்து செய்யப்பட்ட நான்கு லாச்சிகளுடன் கூடிய Counter Table விற்பனைக்கு உண்டு. (நகைக்கடை, புடைவைக் கடை மற்றும் பாவனைக்கு உகந்தது) தொடர்பு: 49, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். மாலை 4 மணிக்குப் பின் பார்வையிடலாம். (4613)

கோல்ட் பிஷ் மீன்கள் பெரியது, அதிரடி மீன்கள் (நீலம்), கலிக்கோ ஏஞ்சல் மற்றும் பல வர்ண மீன்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. விஜயன், 35/1, இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள ஒழுங்கை, யாழ்ப்பாணம். (4644)

கொழும்பிலிருந்து புறொயிலர் குஞ்சும், பேட்டுக் குஞ்சும் 13.06.2002 மாலை வரவுள்ளன. பதிவுகளை முன் கூட்டியே செய்துகொள்ளவும். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (4651)

இல.17, யாழ்.பிறவுண் வீதியில் (2 3/4 பரப்பு) சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிவஞானம், ஸ்ரீ கணேசன், கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு (தாவடிச் சந்தி). (4653)

புறொயிலர், கல்பேட் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: மிருக வைத்தியசாலைக்கு முன்பாக, 18, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (4658)

## வீடு வாடகைக்குத் தேவை

கொக்குவில் பகுதியில் அல்லது நல்லூர் கோயிலை அண்டிய பகுதியில் அல்லது யாழ்ப்பாண நகர எல்லைக்குட்பட்ட பகுதியில் சகல வசதிகளுடனும் கூடிய சிறிய குடும்பத்திற்கு ஏற்ற வீடு வாடகைக்குத் தேவை. முற்பணம் தரப்படும். கீழுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 075-537757 (4605)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம்செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (4494)

இறைச்சிக்கோழிகள் புறொயிலர் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து பாதிக்கோழியுட்படப் பெற்றுக்கொள்ளலாம். 1kg - 165/= சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு: 157, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (4657)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. தினமும் இலவசமாகச் சுத்தம் செய்து வேண்டிய நிறையில் பெற்றுக்கொள்ளலாம். விலை ரூ.175/=. தொடர்பு: சிவா, (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (சி-22447)

## பிறிமா கோழிக்குஞ்சு

பிறிமா லோமன் புறொயிலர் குஞ்சுகளும், இரண்டு கிழமை வளர்ச்சியடைந்த பிறிமா கைலைன் பிறவுண் பேட்டுக் குஞ்சுகளும் உடன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மல்லிகாபதி, மானிப்பாய். (4579)

## தவறிவிட்டது

தர்மலிங்கம் றொபேட் வில்சன் என்பவரது தே.அ.அ.(இல.771813780V) 20.05.2002 அன்று முகமாலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அருட்தந்தை R.C.X.நேசராஜா (இயக்குநர், யாழ்.மறைக் கல்வி நடுநிலையம்), ஆயர் இல்லம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (4648)

154/8, ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் பகீரதன் என்பவருடைய தே.அ.அட்டை (இல.772301774V), விசேட அ.அட்டை (இல.0902046267), பல்கலைக்கழக அ.அட்டை என்பன முகமாலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.7, உடையார் லேன், கந்தர்மடம் அல்லது யாழ்.பல்கலைக்கழகத்தில் ஒப்படைத்துதவவும். (4640)

செல்லத்துரை மோகனராஜா என்பவரின் லாண்ட் மாஸ்ரர் NPGH 1256 புத்தகம் 06.06.2002 வியாழனன்று கொக்குவில் ஆனைக்கோட்டை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாருஜன் போட்டோஸ்ரட், கொக்குவில் சந்தி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (4643)

## கார் விற்பனைக்கு

5ஸ்ரீ8687 வொக்ஸ்வகன் (Volfkswagon) கார் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R.A.இரட்சகன், இல. 23, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (4526)

## கைரேகை பார்த்தல்

கைரேகை, ஜாதகம், எண் சோதிடம், திருமணப் பொருத்தம், தெய்வீக நூல் கட்டவும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: சி.சோதி நாகரத்தினம், மெய்கண்டான் வீதி, இளவாலை வடக்கு, இளவாலை. (4627)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 38 வயதான, அழகிய, உயர் அரச பதவி வகிக்கும் மணமகளுக்கு தாயார் அதே குடும்பத்தைச் சேர்ந்த அதே தகுதியுடைய முன்பு திருமணமாகாத மணமகனைத் தேடுகிறார். சீதனம் தகுதிக்கேற்ப வழங்கப்படும். தொடர்பு: விள.இல. 1534, மே/பா. உதயன். (4612)

## யாழ்.மாணவருக்கு சமாதானக் குடைகள்

யாழ்ப்பாணம்,ஜுன்9

ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை லயன்ஸ் கழகத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு சமாதானக் குடைகள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

சமாதானத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட லயன்ஸ் கழகத்துடன் இணைந்து எதிர்வரும் 22ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக இந்தக் குடைகள் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

'சமாதானம்' என்று மும்மொழிகளிலும் எழுதப்பட்ட பல வர்ணக் குடைகள் 3 ஆயிரம் இதற்கெனக் கொழும்பில் இருந்து எடுத்துவரப்படவுள்ளன.

அதிபர்களால் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு மட்டுமே குடைகள் வழங்கப்படவுள்ளதாகவும், வழங்கும் நிகழ்வு விரைவில் இடம்பெறும் என்றும் மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-10)

## பரீட்சை

மக்கள் வங்கிக்கு முகாமைத்துவப் பயிலுநர்கள் மற்றும் வங்கி உதவியாளர்கள் ஆகியோரை ஆள்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சை எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. (ஒ-10)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 07 - 02 - 1924



இறப்பு 13 - 05 - 2002

## திருமதி தம்பிமுத்து பாக்கியம்

*அன்பின் ஜோதியாய் அறத்தின் வழி நின்று எம்மையெல்லாம் பண்புடனும், பாசத்துடனும் வளர்த்து ஆளாக்கி இறைபதம் எய்திய அன்புத் தாயின். ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.*

எங்கள் அன்புத் தாயின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு எதிர்வரும் (12.06.2002) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதனையொட்டி, நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"எம் தாயின் மறைவுச் செய்தி கேட்டு துக்கத்தில்
- பங்கு கொண்டோருக்கும்,
பகல் - இரவு என்று பாராது பக்கத்தில் இருந்து அரவணைத்த
- எம்மவர்க்கும்
எதிர்பார்த்திரா உதவிகள் பல செய்த அயலவர்க்கும் - நாம்
காத்திருந்து சொல்லும் நன்றிகள் பல"...

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*தகவல்:- பேரன்*
ஆறுமுகம் செல்வராஜா
*86/10 Modara st.,*
*Colombo -15*

(4656)

பிரிவால் துயரும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## தேவை

334, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பகலோன் களஞ்சியத்திற்கு கணக்குப் பதிவதற்கு 35இற்கும் - 45இற்கும் இடைப்பட்ட வயதுடைய ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப தாரி எமது நிலையத்திற்கு (10.06.2002) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு சமுகமளிக்கவும். (4652)

## யா/வியாவில் சைவ வித்தியாலயம் காரைநகர்

*மீள் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கட்டடங்களின்*

# திறப்பு விழா - 2002

*காலம்* : இன்று (2002-06-09) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணி
*தலைவர்* : திரு.ஆ.குமரேசமூர்த்தி *(அதிபர்)*

முதன்மை விருந்தினர்
உயர்திரு. திருமதி ப்ரீ.விக்னேஸ்வரன் அவர்கள்
*(கல்விப் பணிப்பாளர், தீவகக்கல்வி வலயம், வேலணை)*

சிறப்பு விருந்தினர்கள்
திரு. திருமதி கே.கதிரவேலு அவர்கள்
*(முன்னாள் அதிபர், யா/வியாவில் சைவ வித்தியாலயம், காரைநகர்)*
திரு.ரீ.பாலகிருஷ்ணன் அவர்கள்
*(சிரேஷ்ட வெளிக்கள உத்தியோகத்தர் UNHCR யாழ்ப்பாணம்)*
திரு.வி.என்.மூர்த்தி
*(திட்ட இணைப்பாளர், FORUT ஊர்காவற்றுறை)*
திரு.எஸ்.புஸ்பநாதன்
*(தொழில்நுட்ப உத்தியோகத்தர், GTZ, யாழ்ப்பாணம்)*

கௌரவ விருந்தினர்கள்
திரு.வ.நமசிவாயம் அவர்கள்
*(பழைய மாணவர், பிரபல தொழில் அதிபர், இளவரசி சேலைச்சோலை)*
திரு.க.சோமசேகரம் அவர்கள்
*(பழைய மாணவர் சங்கத் தலைவர், பிரபல தொழிலதிபர், மகாராணி பட்டுச்சோலை)*
திரு. திருமதி செ.இராமுப்பிள்ளை அவர்கள்
*(முன்னாள் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், யா/வியாவில் சைவ வித்தியாலயம், காரைநகர்)*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
*யா/வியாவில் சைவ வித்தியாலயம், காரைநகர்.*

(C/22439)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 - 03 - 1971



உதிர்வு 10 - 06 - 1992

## அமரர் ஸ்ரீபாலகணேசமூர்த்தி சுஜீந்திரன்

திதி:10.06.2002

உறவின் பிரிவில் சங்கமித்து ஆண்டுகள்
பத்து மறைந்திடினும் உம் நினைவுகள்
எம் உள்ளத்தில் நிலைத்துக்கொண்டே இருக்கும்.

*உமது ஆத்ம சாந்திக்காக*

*தகவல்:*
*சி.சுகந்தன்*
*"திருமகள் வாசா"*
*வட்டுவத்தை,*
*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்* (4647)

*பிரார்த்தித்து நிற்கும்:*
மம்மி, மம்மா, தம்பிமார், தங்கை,
மாமாமார், அன்ராமார்,
மாமிமார், சித்தப்பாமார் மற்றும்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

மூத்த தமிழ் பெருந்தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், சட்ட வல்லுநருமான

## அமரர் முருகேசு சிவசிதம்பரம்

அவர்கள் 05.06.2002 அன்று அமரத்துவம் எய்தியமையிட்டு அதிர்ச்சியும் மனவேதனையும் அடைகின்றோம். அன்னாருக்கு எமது இதய அஞ்சலியைக் காணிக்கையாகச் செலுத்துவதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*"ஜெயமகால்",*
*மானிப்பாய் வடக்கு,*
*மானிப்பாய்.* (4649)

இ.வல்லிபுரம் ஜே.பி.
முன்னாள் அதிபர்,
யா/இமையாணன் அ.த.க.
வித்தியாலயமும் சமூகமும்.



அமரர் மு.சிவசிதம்பரத்தின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ள உலகத் தமிழ்ப் பேரவைத் தலைவர் இரா.ஜனார்த்தனம் (வலதுபுறம்) நேற்று உதயன் பணிமனைக்கு விஜயம் செய்யபோது எடுக்கப்பட்ட படம். அருகில் வவுனியா மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் சதாசிவம் குலதேவராஜா அமர்ந்துள்ளார். (படம்: தேவராஜன்)

# கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 10 பின்தங்கிய கிராமங்கள் தெரிவு

பின்தங்கிய நிலையில் உள்ள கிராமங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டத்திலுள்ள 10 பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து தலா ஒரு கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

'பங்கேற்பு கிராம அபிவிருத்தித் திட்டத்தின்'கீழ் இவை தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காகத் தெரிவு செயயப்பட்டுள்ள பிரதேச செயலர் பிரிவுகளும், அவற்றிலிருந்து தெரிவான கிராமங்களினதும் விவரம் வருமாறு:-

ஊர்காவற்றுறை - சூரியாவத்தை, வேலணை - சரவணை, கோப்பாய் - இருபாலை கிழக்கு, நல்லூர் - நாயன்மார்கட்டு, சண்டிலிப்பாய் - முள்ளி, தென்மராட்சி - வரணி வடக்கு, தெல்லிப்பழை - முருங்கையற்புலம்.

சங்கானை - பள்ளைகட்டி, கரவெட்டி - கதிராலை, மருதங்கேணி- செம்பியன்பற்று என்பனவே மேற்படி கிராமங்களாகும்.

மேற்படி கிராமங்கள் தொடர்பான விவரங்களை தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பவேண்டியிருப்பதனால் பிரதேச செயலர்களை விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு யாழ்.மாவட்ட யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (எ-ரி)

# மாணவர்களின் ஒழுங்கீனங்களை தடுக்க ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு,ஜூன்9

பாடசாலை மாணவர்களிடையே காணப்படும் ஒழுங்கற்ற செயற்பாடுகளைச் சீர்செய்ய பாடசாலை மட்டங்களில் ஆலோசனைக் குழுக்களை நிறுவலாம் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குவிற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி தனது ஆலோசனையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

தற்போது பாடசாலை மாணவர்களிடையே தீவிரப்போக்கு அதிகரித்துவருகிறது. அவர்கள் தவறாக முடிவு எடுத்துச் செயற்படவும் ஆரம்பித்துள்ளார்கள். இந்தநிலையினைப் பார்த்துக்கொண்டிருப்போமானால் மோசமான விளைவினை அனுபவிக்க நேரிடும்.

எனவே கல்வி அமைச்சு, பாடசாலைகள் ரீதியிலும், தனிப்பட்ட ரீதியிலும் மாணவர்களுக்கான ஆலோசனைக் குழுக்களை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.(ஒ-12)

## மறியற் போரின்போது
# கடற்றொழிலாளர்கள் பொலீஸாருடன் தர்க்கம்!

யாழ்ப்பாணம்,ஜூன்9

குடாநாட்டில் சுதந்திரமாக மீன்பிடித் தொழில் செய்வதற்கு அனுமதிக்கவேண்டும் எனவும், கரையோரங்களில் உள்ள மீனவர் குடியிருப்புக்களில் இருந்து படையினர் வெளியேற வேண்டும் என்று கோரியும், யாழ். செயலகம் மற்றும் யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் ஆகியவற்றின் முன்பாக தொடர்ச்சியான மறியற்போராட்டத்தில் ஈடுபட்டுவரும் கடற்றொழிலாளர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையே நேற்றுமுன்தினம் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் யாழ். செயலகப் பகுதியில் சிறிதுநேரம் பதற்றம் நிலவியது.

மறியற்போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மீனவர்கள் செயலகத்தின் அருகில் செல்லும் கச்சேரி - நல்லூர் வீதியை நேற்றுமுன்தினம் காலை மக்கள் போக்குவரத்துக்குத் தடை செய்து வீதியின் குறுக்கே கயிறு கட்டியிருந்தனர்.

இதனையடுத்து, அங்குவந்த பொலீஸார் வீதியைத் தடை செய்யாது போராட்டத்தில் ஈடுபடுமாறும் -

வீதித்தடையினால் போக்குவரத்துச் செய்யமுடிவில்லை என்று பொதுமக்கள் தம்மிடம் முறையிட்டுள்ளதாகவும் -

போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் தெரிவித்தனர்.

ஆனால், வீதித்தடையை நீக்க மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணத்துடன் பொலீஸார் கலந்துரையாடினர். அதனைத் தொடர்ந்து வீதித் தடையை அகற்ற கடற்றொழிலாளர்கள் சம்மதித்தனர்.

பின்னர் வீதிதடை அகற்றப்பட்டதை அடுத்துப் பொலீஸார் கச்சேரி - நல்லூர் வீதியூடாகத் தமது வாகனதில் சென்றனர். தொடர்ந்து பொதுமககளும் வீதியூடாகப் போக்குவரத்தைத் தொடர்ந்தனர். (ஒ-10)

# எள் விளைச்சல் அமோகம்

சுழிபுரம்,ஜூன்9

சுழிபுரம் பகுதியில் இம்முறை எள விளைச்சல் அமோகமாகக் காணப்படுகின்றது.

தற்போது அறுவடை செய்யப்பட்டு வரும் எள் கிலோ 60 ரூபா வீதமும் ஒரு போத்தல் நல்லெண்ணெய் 150 ரூபா வீதமும் விற்கப்படுகின்றன.

வெளி இடங்களிலிருந்து யாழ். குடாநாட்டிற்கு வருவோர் எள்ளுப்பாகு, நல்லெண்ணெய் போன்றவற்றை வாங்கிச் செல்வதில் ஆர்வங்காட்டி வருகின்றனர். (ஒ-13-28)

# சட்டவிரோதமாக மின்பெற்றோர் சிக்கினர்

ஏழாலை,ஜூன்9

மாதகல் பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றுவந்த சிலர் கடந்தவாரம் சுன்னாகம் மின்சார சபையினரும் இளவாலைப் பொலீஸாரும் இணைந்து மேற்கொண்ட சோதனையில் சிக்கிக்கொண்டனர்.

இதன்போது கைதுசெய்யப்பட்டோருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் தலா 1000 ரூபா தண்டப் பணத்துடன் 2 வருட நன்னடத்தைப் பிணை அல்லது 6மாத சிறைத தண்டனை அனுபவிக்க வேணடும் என மல்லாக மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியம் தீர்ப்பளித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-13-ரி)

# நற்சிந்தனைகள் பல பகர்ந்த கைதடி மார்க்கண்டு சுவாமிகள்

கைதடி மார்க்கண்டு சுவாமிகளின குருபூசை தினம் இன்று (வைகாசி மாத கார்த்திகை நட்சத்திரம்) அனுஷ்டிக்கப்படுகிறது. அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

யோகர்சுவாமிகளின் ஆளுகைகருள் உட்பட்டவர்களுள் முதன்மைச் சீடராக வாழ்ந்து வழிகாட்டியவர் கைதடியூர் மார்க்கண்டு சுவாமிகள்.

சிறுவயதிலேயே அவர் மனம் ஆனமீகத்தை நாடியதால் அவர் கூடுதலாக தனது நேரத்தை பிரான்பற்று முருகமூர்த்தி ஆலயத்திலேயே சிவ தொண்டு செயவதிலும் பிரார்த்தனைகளில் ஈடுபடுவதிலும் கழித்தார். சுன்னாகத்தைச் சேர்ந்த கந்தரோடை இந்துக் கல்லூரியில் கல்வி கற்றவர். "சீனியர் கேம்பிறிஜ்" சோதனையில் சித்தியடைந்து தியத்தலாவை நிலஅளவைத் திணைக்களத்தில் எழுதுவினைராகக் கடமையையேற்றார். மார்க்கண்டர் தியத்தலாவையில் பணியாற்றிக்கொண்டிருந்த வேளையில் தான் அவர் யோகமுனியின் அருட் பார்வைக்கு இலக்கானார்.

நிலஅளவைத் திணைக்களத்தில் வேலைசெய்த மார்க்கண்டருக்கு யோகர்சுவாமி "வடதிசை காட்டும் கருவியைப் போல இரு" என்று கூற மார்க்கண்டரும் தமது மனத்தை எப்பொழும் பரமாத்தை நோக்கி எண்ணத தொடங்கினார்.

ஐம்பதாவது வயதில் மார்க்கண்டர் உத்தியோகத்திற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு கொழும்பிலிருந்து நேரே கொழும்புத்துறையில் யோகநாதன் குடிகொண்டிருந்த கொடடிலை நோக்கி ஓடிவந்து நேராக யோகர்சுவாமிகளின் பாதங்களில் வீழ்ந்து இனி நீயே கதியென சரணடைந்தார்.

1938ஆம் ஆண்டு யோகர்சுவாமிகள் கைதடிக்குச் சென்றுபோது விஸ்வலிங்கம் ஆசிரியரின் தகப்பன் சின்னத்தம்பி சுவாமிகள் தனியாகத் தங்கக்கூடிய குடிசை ஒன்று இவ் வீட்டின் முன்பக்கத்தில் இருக்கின்றது என்று கூறினார். அதற்கு யோகர் சுவாமிகள் "பொறுத்திரு அதற்கு இன்னும் சிலகாலம் இருக்கிறது" என்று கூறினார்.

1950ஆம் ஆண்டு கொழும்புத்துறை சென்ற விசுவலிங்கத்தை யோகர்சுாமிகள் அங்கு தங்குமாறு பணித்தார். அடுத்தநாள் காலை "விசுவலிங்கம் உனக்கு இனிமேல் கைதடியில் இருக்க நல்ல ஒரு சிநேகிதனைத் தருகிறேன். அவன் போகும்போது உங்களுக்கெல்லாம் தந்துவிட்டுப் போவான். நான் நாளை கைதடிக்கு அவனையும் அழைத்து வருவேன்" என சுவாமிகள் கூறினார்.

யோகர்சுவாமிகள் மார்க்கண்டரோடு கார் ஒன்றிலே கைதடிக்கு வந்தார். சுவாமிகள் வரும்போது கட்டில், மெத்தை, உணவு தயாரிக்கும் எண்ணெய், அடுப்பு போன்றவற்றை எடுத்துவந்திருந்தார்.

மார்க்கண்டரும் இந்த ஆச்சிரமத்திலிருந்து உயர் ஞான சாதனைகளில் ஈடுபட்டார்.

மார்க்கண்டுசுவாமிகள் தம் இறுதி நாள்களில் குளிப்பு முழுக்கு முதலியற்றைக் கைவிட்டதோடு, உணவையும் வெகுவாகச் சுருக்கிக் கொண்டார்.சுவாமிகளோ சும்மா விருந்து இரத்தாசி வருடம் வைகாசி 16ஆம் நாள் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு கார்த்திகை நட்சத்திரத்தில் யோககுருநாதன் திருவடிகளைப் பற்றினார்.

**நல்லூரான்.**

# நிலையான இன்பத்தைப் பெற முயல்வோம்

அருட்சகோதரர் சரத்ஜீவன்

ஒரு மனிதனுடைய வாழ்வுக் காலம் இவ உலகிலே மிகக்குறுகியது. தோன்றி மறையும் நீர்க்குமிழி போன்றது. நாடக மேடையிலே தோன்றி மறையும் நடிகர்களின் தோற்றம் போன்றது.

இந்தக் குறுகிய வாழ்வுக்காலத்தை சந்தோசமாக வாழ்ந்து முடிக்க வேண்டும் என எவ்வளவோ முயற்சி எடுக்கின்றோம்; கடினமாக உழைக்கின்றோம்; மண்ணையும் பொன்னையும் அள்ளிக்குவிக்க இராப்பகலாக ஓடி ஓடி உழைக்கின்றோம்; நாய் கூடத் தின்னாத பணத்தைத் தேடி நாயாகப் பேயாக அலைகின்றோம். பணம் கட்டுக்கட்டாகக் கிடைக்கும் என்றால தன்மானத்தையே விலைபேச - காற்றில் பறக்கவிட - நாம் தயங்கமாட்டோம். ஏன்? சற்றுநேர சுகத்திற்காக மனிதமாண்பையே இழக்கத் தயாராக இருக்கின்றோம். உலகத்தின் மாயைத் தோற்றங்களால் போலியான, கவர்ச்சியான செயற்பாடுகளால் ஈர்க்கப்பட்டு, அவற்றுக்குள் மூழ்கி, அவைதான் நிஜம் என்று நம்பி வாழ்கின்றோம்.

ஆனால், எமது வாழ்விற்கு ஒரு மறுபக்கம் உண்டு என்று எமக்குத் தெரியுமா? அல்லது தெரிந்தும் அந்த வாழ்வின் மறுபக்கத்தை பார்க்க - ஏற்றுக்கொள்ள - வாழ மறுக்கின்றோமா? ஆம்! இவ் உலக குறுகிய வாழவுக்காலத்தைத் தொடர்ந்து எமக்கு ஒரு முடிவில்லா வாழ்வு, நிலையான வாழ்வு ஒன்று உண்டு என்பதே எமது விசுவாசம். இந்த முடிவற்ற வாழ்வு எமக்கு எல்லையற்ற இன்பமாக, மகிழ்ச்சியாக, பேரானந்தமாக மாறுவதும் அல்லது முடிவற்ற நரக வேதனையாக, பயங்கரமானதாக மாறுவதும் எங்களுடைய கைகளில்தான் உள்ளது. அதாவது, இப்போது இவ் உலகிலே நாம் வாழும் வாழ்க்கை முறைதான எமது மறு உலகவாழ்வை நிர்ணயிக்கப்போகின்றன.

இவ் உலகிலே நாங்கள் பொன்னுக்காகவும், பொருளுக்காகவும், பணத்திற்காகவும், பெயருக்காகவும், புகழுக்காகவும், பட்டம, பதவிக்காகவும், உடல் இன்பத்திற்காகவும் மட்டுமே வாழுகின்றோம் என்ற நிலை இருக்குமாயின், மறு உலகு எமக்கு நரகவாழ்வாகவே அமையும். இவை அனைத்தையும் வேண்டாம் என்று முழுமையாக ஒதுக்கிவிடும்படியாக நான் கூறவில்லை. மாறாக இவை அனைத்தையும் பேராசையோடு எம்முடைய தேவைக்கு அதிகமாகத் தேடி அடையவிரும்புவதே தவறு மட்டுமல்ல பாவமும் கூட.

எனவே, சகோதரர்களே எங்களுடைய இக்குறுகிய வாழ்வுக்காலத்திலே, மறுவுலக வாழ்விற்கு, நிலையான வாழ்விற்கு மகிழ்வையும், பேரின்பத்தையும் தரக்கூடிய செல்வங்களான அன்பு, உண்மை, நீதி, சமாதானம், இரக்கம், மன்னிப்பு, சகோதரத்துவம் போன்றவற்றைக் கண்டடைய முயற்சிப்போம்.

ஞாயிறு நற்பிரசாதம்

★

# செய்திக்கொத்து

## அதிபர் நியமனம்

குருநகர்,ஜூன்9

குருநகர் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் அதிபராக எஸ். எஸ். தங்கராஜா இம்மாதம் முதலாம் திகதி முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் சேவையாற்றிய குருநகர் சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலைக்கு கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய திருமதி லூ.மகேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

(எ-13-51)

## நெறியாளர் குழு தெரிவிற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்9

தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத்தின் புதிய நெறியாளர் குழுத் தெரிவுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கனகசபாபதி தெரிவித்துள்ளார்.

மேலும், இதன் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக கிளைககுழு உறுப்பினர் தெரிவுக்கான தேர்தல் ஜூலை இறுதிக்குள் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(எ-13-17)

## பதவி உயர்வு

யாழ்ப்பாணம்,ஜூன்9

கரவெட்டி பிரதேச செயலகத்தில் நிதி உதவியாளராகக் கடமையாற்றிய அ.மே.யோசெப் வல்வெட்டித்துறை நகரசபையின் செயலாளராக வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(எ-13-ரி)

## மரநிழலில் இருந்து கல்வி கற்கும் மாணவர்கள்

வடமராட்சி கிழக்கு,ஜூன்9

மருதங்கேணி பிரதேசத்தில் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ள பாடசாலைகளின் கட்டடங்கள், தளபாடங்கள் யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்துள்ளன.

இதனால் மாணவர்கள் மர நிழலின் கீழ் தரையில் அமர்ந்து கல்வி கற்று வருகின்றனர்.

ஆழியவளை சீ.சீ.த.க. பாடசாலை, உடுத்துறை மகா வித்தியாலயம், மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை, செம்பியன்பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவையே இவ்வாறு இயங்கி வருகின்றன. (எ-13-182)

## கல்வி அதிகாரி நேரில் விஜயம்

வடமராட்சி கிழக்கு,ஜூன்9

வடமராட்சி கிழக்கில் மீள இயங்கத் தொடங்கியுள்ள நான்கு பாடசாலைகளையும் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.அனந்தராஜ் கடந்த செவ்வாய்க்கிழமை பார்வையிட்டார்.

ஆழியவளை சீ.சீ.த.க.பாடசாலை, உடுத்துறை ம.வி., மருதங்கேணி இ.த.க.பாடசாலை, செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை ஆகியனவே சொந்த இடங்களில் மீள இயங்கத் தொடங்கியுள்ளன.

மேற்படி பாடசாலைகளில் நூலகங்களை மீண்டும் ஆரம்பிக்கும் வகையில் ஒருதொகுதி நூல்களையும் உதவிக் கல்விப் பணிப்பாளர் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களிடம் கையளித்தார்.

(எ-13-182)

## சான்றிதழ் பெறாத மாணவர் விவரம் சேகரிப்பு

தாவடி,ஜூன்9

யாழ்.மாவட்டத்திலுள்ள கல்விக் கோட்டங்கள் மற்றும் வலய மட்டங்களில் நடத்தப்பட்ட விளையாட்டு மற்றும் ஆங்கில, தமிழ்த்தினப் போட்டிகளில் வெற்றியீட்டிய போதும் அவற்றிற்கான சான்றிதழ் கிடைக்கப்பெறாத மாணவர்களின் பெயர் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பணிப்புரையை அடுத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கடந்த 5 ஆண்டுகளாக இவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்களின் விவரங்கள் பாடசாலை அதிபர்கள் ஊடாக சேகரித்து வருகின்றனர். (எ-13-ரி)

## வீடு வாடகைக்குத் தேவை

அரசசார்பற்ற நிறுவனங்கள் அமைந்துள்ள பகுதியில் (கோயில் வீதி) அல்லது இப்பகுதிக்கு இரண்டு கிலோமீற்றர்கள் (2km) சுற்றாடலில் சர்வதேச நிறுவனத்தைச் சார்ந்தவர்களுக்கு மாடி வீடு தேவை.

மூன்று படுக்கை அறைகள் (இணைக்கப்பட்ட குளியலறைகள் இருப்பின் நன்று), மூன்று வாகனங்கள் தரித்து நிற்பதற்கு உரிய இடவசதியுடன் வீடு இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:*

**விளம்பர இல. 1535,**
**மே/பா. உதயன்**
(4628) **361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**



## CHUNDIKULI GIRLS' COLLEGE OLD GIRLS' ASSOCIATION, JAFFNA.

**THE ANNUAL GENERAL MEETING AND FELLOWSHIP LUNCH**

*Date* - **Saturday 15th June 2002.**
*Venue* - **College Hall**

**AGENDA**

*10.00a.m.* - Holy Communion & Worship Service at St.John the Baptist' s Church, Chundikuli.
*12.00noon* - A.G.M
*1.00p.m.* - Lunch
*2.30.p.m. - 3.30.p.m* Games
*4.00p.m .* - Principal's tea

*Lunch Tickets* - Rs 125/=

All old Girls are Cordially invited.

(C/22432) - Secretary



## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 24 - 10 - 1950



உதிர்வு 26 - 05 - 2002

**அமரர் வைரவி சுபாஸ்**

**திதி:- 09.06.2002**

ஆலமரம் ஒன்று சரிந்ததையா!
அதன் நிழலில் ஆறிய பறவையெல்லாம்
சிறகொடிந்தவை போல் திக்கெல்லாம்
தேடித் திரிகின்றனவே உம் பிரிவால்!
பிரியேன் என்று காலமெல்லாம்
கண்ணிமை போல் காத்தீர்களே!
கண்கண்ட தெய்வமே! கலங்குகிறோம்
நாம் எல்லாம் நாள் தோறும்.....!

(4629)

*அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.* - குடும்பத்தினர்.



## பதவி வெற்றிடங்கள்

1. மருத்துவ பிரதிநிதி (Medical Representative)
கொழும்பு J.மொறிசன்ஸ்(லிமிட்டெட்) நிறுவனத்துக்காக வட மாகாணப் பிரதிநிதியாகப் பணிபுரிய ஆள் தேவை. மருத்துவத் துறையில் அனுபவமும் அறிவும் மேலதிக தகைமைகளாகக கருதப்படும். வைத்திய கலாநிதிகளைச் சந்தித்து உரையாடி விளக்கத்தக்க திறமை முக்கியமானது.
*தகைமை:* க.பொ.த. (உயர்தரம்) [கணிதம், விஞ்ஞானம் விரும்பத்தக்கது]

2. விற்பனைப் பிரதிநிதி
கண்ணாடிப் பொருள்கள், பிளாஸ்ரிக் பொருள்கள் போன்ற வீட்டுப் பாவனைப் பொருள்களை விற்பதற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.
தேவையான ஆவணங்களுடன் எதிர்வரும் **(12.06.2002)** புதன்கிழமை நேரில் சமுகம் தரவும்.

*நேரம்:* காலை 9.30 மணிமுதல் நண்பகல் 12.30 மணிவரை.

The Peninsula Group
127/10, Temple Rd,
Jaffna.

த(The) பெனின்சுலா குறூப்
*127/10, கோயில் வீதி,*
(4615)*நல்லூர், யாழ்ப்பாணம்.*


## ரயில்வேயில் தனியார் பங்கு

கொழும்பு,ஜூன்9

ரயில்வேத் திணைக்களத்தை 50 சதவீதத்தால் தனியார் மயப்படுத்தும ஒரு யோசனையை அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.

இதன்படி ரயில் பாதைகள் அரசின் பொறுப்பிலேயே இருக்கும், சேவைகள், ரயில் என்ஜின்கள், பெட்டிகள், உதிரிப்பாகங்கள் இறக்குமதி, ரயில் நிலையங்கள் என்பன தனியார் துறையினரிடம் வழங்கப்படும். (ஐ)

## கூட்டுறவுச் சங்கங்களின் வன்னி கிளைகளிலிருந்து பொருள்கள் வந்தன

அரியாலை,ஜூன்9

கடந்த 1995ஆம் ஆண்டு முதல் வன்னியில் செயற்பட்டு வந்த யாழ். குடாநாட்டை சேர்ந்த ஏழு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகள் மீண்டும் தாய்ச் சங்கங்களுடன் இணைக்கப்பட்டதையடுத்து, வன்னியில் அந்தச் சங்கங்களின் கையிருப்பில் இருந்த பொருள்கள் யாவும் தரைப்பாதையூடாக யாழ்.குடாநாட்டுக்கு எடுத்துவரும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி சங்கக் கிளைகளில் ஒன்றான யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளையில் இருந்து ஒரு லொறியில் மா, சீனி, அரிக்கன்லாம்புகள், பால்மா போன்ற பொருள்கள் நேற்று எடுத்துவரப்பட்டன. (ஒ-17)

## பஸ்சேவை சீரில்லை நீர்வேலி மாணவர் அலைச்சல்!

அச்சுவேலி,ஜூன்9

நீர்வேலி மாணவர்களுக்காக நடத தப்படும் பாடசாலை பஸ் சேவை கடந்த சில நாள்களாக உரிய முறையில் நடத்தப்படாமையினால் மாணவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

நீர்வேலிக் கந்தசுவாமி கோயிலடியில் இருந்து புறப்படும் பாடசாலை மாணவர்களுக்கான பஸ் சேவையே இவ்வாறு உரிய முறையில் நடைபெறுவதில்லை எனக் கூறப்பட்டது.

இதனால் நீர்வேலியில் இருந்து நகரப் பாடசாலைகளுக்கு மாணவர்கள் பிந்திச் செல்வதுடன், சில வேலைகளில் பாடசாலைக்குச் செல்லாமல் வீதியில் காத்து நின்றுவிட்டு, வீடு திரும்புவதாகவும் கூறப்படுகிறது. (எ-11)

## பனையிலிருந்து வீழ்ந்து காயம்!

தென்மராட்சி,ஜூன்9

கள் எடுப்பதற்காக மரத்தில் ஏறியவர் தவறிவீழ்ந்து படுகாயமடைந்த சம்பவம் கடந்த புதன்கிழமை குடத்தனை மேற்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ். இராமையா (வயது 38) என்பவரே இந்தச் சம்பவத்தில் காயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ஒ-117)

## தடைநீக்கம் தொடர்பாக அரசு ஆராய்வு

கொழும்பு,ஜூன்9

விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை நீக்குவதற்கான சட்ட நுணுக்கங்கள் பற்றி அரசு தற்போது ஆராய்ந்து வருவதாக அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன என்றும் -

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்று திரும்பிய பின்னர் இது தொடர்பான இறுதி முடிவு வெளியாகும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-3)


## நியூசயன்ஸ் அக்கடமி
நெல்லியடி

**A/L 2003 DAY CLASS**

| | |
|---|---|
| இரசாயனம் | -திரு. மணியம் |
| பௌதிகம் | -திரு. குமரன் |
| இணைந்த கணிதம் | - திரு. செந்தில்ராஜ் |
| உயிரியல் | -திரு. தற்பரன் |

ஆரம்பம்:- 11.06.2002

**A/L 2004**

இரசாயனம் - திரு. மணியம்

மாணவர்கள் முன்கூட்டியே பதிவுகளைச் செய்து கொள்ளவும்.

(4623) நிர்வாகி.



## கராத்தே கழகப் பெயர் மாற்றம்

இதுவரை காலமும் J.K.M.O. என்ற பெயருடன் இயங்கிவந்த எமது கழகம் தற்பொழுது தனித்துவமான முறையில் SHOTOKAN KARATE MARTIALARTS ACADEMY என்ற பெயருடன் இயங்கிவருகின்றது என்பதை கராத்தேயாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

சென்செய் இ.விஜயபாஸ்கர்
(3ஆம் கறுப்புப் பட்டி)
கழக இயக்குநர் (S.K.M.A.).

*408, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.* (4637)



## விற்பனைக்கு

U.K.இல் இருந்து தருவிக்கப்பட்ட நல்ல நிலையில் உள்ள
**Compag Pentium II 350 Mhz**
**14" Monitor, 64 mb Ram, 6G.B. Hard Disk.**
**Inbuilt Sound Card, Net Work Card ect.**

**Price:- Rs. 32,900/=**

தொடர்பு:
(4608) No. 1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



## சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாணம்
## மாணவ ஆண் தாதி/பெண் தாதிய பயிற்சிக்கு ஆள்களைச் சேர்த்தல் - 2002

இது தொடர்பான 08.05.2002ஆந் திகதிய 'தினகரன்' பத்திரிகை மற்றும் 02.06.2002ஆந் திகதிய 'உதயன்' பத்திரிகை ஆகியவற்றின் விளம்பரத்திற்கு மேலதிகமாக,

01. க.பொ.த. (சா/த) பரீட்சையில் நான்கு விசேட சித்திகள் என்பதற்குப் பதிலாக நான்கு திறமைச் சித்திகள் இருத்தல் வேண்டும்.
02. வாக்காளர் பதிவேட்டின் பிரதி விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டிய அவசியமில்லை. நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும்போது சமர்ப்பித்தல் வேண்டும்.
03. விண்ணப்பமுடிவு திகதி 25.06.2002 வரை நீடிக்கப்பட்டுள்ளது எனவும் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

வைத்தியகலாநிதி உ.சிவபாதசுந்தரம்,
மாகாண பிரதிப் பணிப்பாளர், (C/22436)
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.



## முதலாவது வருட நினைவஞ்சலி

*அன்னை மடியில்* 23 - 05 - 1963



*ஆண்டவன் அடியில்* 09 - 06 - 2001

**திருமதி றெஜிஸ் திரேசம்மா**

எமது அன்புக்கினியவரே! ஆறவில்லை அம்மா!
எம் நெஞ்சு உங்களை மறக்கவில்லை அம்மா!
இங்கு நிலைகெட்டுத் தவிக்கின்றோம் நாம்!
பிட ; மழலை நான் பதறி அழுகின்றேன் அம்மா!

(4530)

தற்காலிக முகவரி: *சுருவில், ஊர்காவற்றுறை.*
நிரந்தர முகவரி: *கோவிந்தபுரம், இளவாலை.*
*உம் பிரிவால் துயருறும்:* பாசமிகு கணவா றெஜிஸ், அன்பு மகள அனிற்றா.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 08 - 07 - 1929



விண்ணில் 22 - 05 - 2001

**திருமதி கந்தையா செல்லம்மா**

*திதி: 09.06.2002*

பத்துமாதம் சுமந்து பெற்று உயர்வுகாண்பதற்கு
ஓயாது உழைத்த அன்னையே!
உன் முகத்தைக் காணவில்லை
ஆறவில்லை எம் கவலை.

*பூமனை ஒழுங்கை, மருதனார்மடம்.* (4586)
பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

# ‘ஜொலி ஸ்ரார்ஸ்’ கிரிக்கெட் போட்டி: இறுதியாட்டம் இன்று நடைபெறுகிறது

யாழ்ப்பாணம்,ஜூன்9

யாழ்.மாவட்ட விளையாட்டு கழகங்களிடையே “ ஜொலி ஸ்ரார்” விளையாட்டுக்கழகம் நடத்திவரும் 14 ஆவது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் விளையாட யாழ். பல்கலைக் கழக அணியும், கொக்குவில் சனசமூக நிலைய அணியும் தகுதி பெற்றுள்ளன.

இன்று காலை8.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இறுதியாட்டத்தில் இந்த இரு அணிகளும் மோதுகின்றன.

12 கிரிக்கட் அணிகள் பங்குபற்றும் சுற்றுப்போட்டியில் இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்ற அணிகளின் வீரர்களின் விவரம் வருமாறு:-

## யாழ்.பல்கலைக்கழக அணி



ஆர்.ஷாஜகான் (தலைவர்), எஸ். விமலன், கே. சசிகரன், ரி.[illegible]ரூபன், ஜி.ஸ்ரீதரன், எஸ்.ஹரிதாஸ், ரி.பீஷ்மன், ரி.ரொபேஷன், எஸ்.சுபாஸ்கரன், ரி.கௌரிபாகன், எஸ்.தனுஸ்காந்தன், ஜி. தங்கேஸ்வரன், என்.பிரதீபன், ஆர்.சுஜீதன், பி.காண்டீபன், ஆர்.பாலமுரளி.

## கொக்குவில் சனசமூக நிலைய அணி



கே. கேதீஸ்வரன் (தலைவர்), என்.நதீஸ்வரன், கே.சுதாகரன், எஸ்.சிவசங்கர், ஆர்.பிரதீபன், எஸ்.சிற்சபேசன், எஸ்.உமாநாத், எஸ்.சிவகணேஸ், கே.நிஷாந், ரி.சுரேஸ்குமார், சி.மதுசன், ஈ.ஜங்கரன், எ.தற்பரன், பி.மயூரன், ரி.பிரகாஷ், வி. அகிலநந்தன்.

# கட்டுடைந்து கிணற்றுள் வீழ்ந்தவர் 12 மணித்தியாலங்களின் பின் மீட்பு!

கிணற்றுக் கட்டு உடைந்ததால் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்தவர் 12 மணித்தியாலங்களுக்குப் பின் கால்கள் விறைத்த நிலையில் மீட்கப்பட்டார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற இச் சம்பவத்தில் உடுவில் பகுதியை சேர்ந்த தேவராசா என்பவரே இந் நிலைக்கு உள்ளானவராவார்.

இவர் வீட்டிற்கு அண்மையிலுள்ள கோவிலொன்றில் நடைபெற்ற சொற்பொழிவை கிணற்றுக்கட்டில் அமர்ந்தபடி கேட்டுக் கொண்டிருந்தபோதே இச்சம்பவம் நிகழ்ந்தது.

மாலை 6.30மணிக்கு கிணற்றுக்குள் வீழ்ந்த இவரை கோவிலுக்குச் சென்று திரும்பிய மனைவியும் பிள்ளைகளும் தேடிப் பார்த்துவிட்டு கோவிலில் உறங்கி விட்டதாக நினைத்தாகவும் -

மறுநாள் காலை கிணற்றுள் இருந்து கேட்ட சத்தத்தையடுத்தே அவர் கிணற்றினுள் விழுந்தது தெரியவந்ததாகவும் - கூறப்பட்டது. அயலவரின் உதவியுடன் மீட்கப்பட்ட மேற்படி நபரின் உடல் நிலை திருப்திகரமாக உள்ளது. (ஓ-13-ரி)

# குற்றவியல் அவதூறு சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்துக்கு!

கொழும்பு,ஜூன்9

குற்றவியல் அவதூறுச் சட்டம் சம்பந்தமான சட்டமூலம் அடுத்த வாரம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப் படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த பொதுத் தேர்தலின் முடிவுகள் வெளியான பின்னரும் கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் முடிவுகள் வெளிவந்த பின்னரும் தேர்தல் நடைமுறைகளில் குறைபாடுகள் இருப்பதாகப் பல எதிர்க்கட்சிகள் குறை கூறியிருந்தன.

இது தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டு அதன்மூலம் நிறைவேற்றப் படும் தீர்மானத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

இக்குழுவைப் பிரதமர் விரைவில் நியமிப்பார் என்று ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். (ஓ-12)

# பனை வெல்லத்துக்கு கிராக்கி!

யாழ்.குடாநாட்டில் பனம் வெல்லத்திற்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து தொழிலாளர்கள் பதநீர் உற்பத்தியில் அதிக கவனம் செலுத்துகின்றனர்.

இதேசமயம் வெல்ல உற்பத்திக்கான பதநீரை பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களினூடாகக் கொள்வனவு செய்வதற்கு பனை அபிவிருத்திச் சபை முன்வந்திருப்பதாகவும் -

அதன் விலை நிர்ணயம் தொடர்பாக சங்கங்களினூடாக தொழிலாளர்களுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் - வட மாகாண பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். (ஓ-13-17)

# நயினை அம்மன் மஹோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பம்

## ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

யாழ்ப்பாணம்,ஜூன்9

சரித்திரப் பிரசித்திபெற்ற நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கயிலைக்காட்சியும்,19 ஆம் திகதி புதன்கிழமை மஞ்சத் திருவிழாவும், 22ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும்,24 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

மேற்படி ஆலய மஹோற்சவத்தில் கலந்துகொள்ளச் செல்லும் அடியவர்களின் நன்மை கருதி வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் விசேட போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

அதேவேளை-

ஆலயச் சூழலில் குடிதண்ணீர், சுகாதார சேவைகள் மற்றும் முதலுதவி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆலயத்திற்கு வருகைதரும் அடியவர்களின் நன்மை கருதி ஆலயத்திற்கு அருகில் உள்ள மடங்களில் அன்னதான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தரைவழிப்பாதை திறக்கப்பட்டதை அடுத்து இவ்வருட மஹோற்சவத்தில் தென்பகுதியில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான அடியவர்கள் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-10)

## கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்9

மட்டுவிலைச் சேர்ந்த சமய, சமூக சேவையாளர் ஆ.நடராசா ‘சைவ சித்தாந்த கலாநிதி’ பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா மெய்கண்டார் நிறுவனமும், கச்சியப்ப சிவாச்சாரிய கலாசார சிவஞானபீடமும் இணைந்து இந்தபட்டத்தை வழங்கியுள்ளன.

மேற்படி பட்டமளிப்பு வைபவம் கடந்த 28ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்றது. (எ-13)

## செய்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூன்9

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் பதிவு அலகினால் நடத்தப்பட்ட நுண்கலைமாணி (நாட்டியம்) எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய 2ஆம், 3ஆம் மற்றும் 4ஆம் வருட மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் அடுத்த மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக வெளிவாரிப் பரீட்சைப் பிரிவின் உதவிப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் 27ஆம், 28ஆம் மற்றும 29ஆம் திகதிகளில் நடைபெறும் என முன்பு அறிவிக்கப்பட்ட பரீட்சைகளே மேற்படி திகதிகளில் நடைபெறவுள்ளன. (ஓ-ரி)

## பள்ளிவாசல் சீரமைப்பு

தென்மராட்சி,ஜூன்9

பற்றைகளால் சூழப்பட்டிருந்த சாவகச்சேரி பள்ளிவாசல் நேற்றுமுன்தினம் தொடக்கம் சாவகச்சேரி நகர சபை ஊழியர்களால் துப்புரவு செய்யப்பட்டு வருகிறது.

சாவகச்சேரிப் பகுதிக்கு வந்துள்ள முஸ்லிம்களின் வேண்டுகோளின் பிரகாரம் இந்தத் துப்புரவு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

பள்ளிவாசல் கட்டடம் கூரைகளின்றிக் காணப்படுவதாகவும் -

அண்மையில் கொழும்பிலிருந்து வந்த மதிப்பீட்டுக் குழுவினர் பள்ளிவாசலுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களை மதிப்பிட்டுச் சென்றுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

## உலர்உணவு விநியோகம்

தென்மராட்சி,ஜூன்9

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளில் இதுவரை ஏப்ரல் மாதத்திற்குரிய நிவாரண உலர் உணவுப் பொருள்கள் பெற்றுக்கொள்ளாதவர்கள் நாளை பத்தாம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமார் கேட்டுள்ளார். (ஓ-117)

## பனங்காட்டிலிருந்து படையினர் வெளியேறினர்

தென்மராட்சி,ஜூன்9

மிருசுவில் உசன் சந்தியிலிருந்து பனங்காடு ஊடாக விடத்தற்பளைக்குச் செல்லும் பகுதியில் நிலை கொண்டிருந்த படையினர் அங்கிருந்து அண்மையில் வெளியேறியுள்ளனர்.

பொதுமக்களின் வீடுகளில் தங்கியிருந்த படையினர் வெளியேறியதையடுத்து வீடுகளின் உரிமையாளர் தமது வீடுகளில் மீளக்குடியமர்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

குருநகர்,ஜூன்9

பெற்றோருக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை மாலை 5 மணிக்கு குருநகர் பெஸ்கி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

‘கியுடெக்’ சமாதானக் குழுவினரால் நடத்தப்படவுள்ள இக்கருத்தரங்குக்கு ‘கியுடெக்’ இயக்குநர் அருட்தந்தை சீ.ஜீ.ஜெயக்குமார் அடிகள் தலைமை தாங்கவுள்ளார். (ஓ-51)

# வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு ஜப்பானிய அரசு உதவுகின்றது

கொழும்பு,ஜூன்9

வடக்குக் கிழக்குப் பிரதேசத்தின் உட்கட்டமைப்பினை மறுசீரமைக்கவென ஜப்பான் நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது.

இதனடிப்படையில் நடைமுறைப் படுத்தப்படும் திட்டத்தின் கீழ் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் விவசாய, சுகாதார, நெடுஞ்சாலை வசதிகள் மற்றும் கல்வி என்பன அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இந்தத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவது சம்பந்தமான விடயங்களை ஆராய ஜப்பானியத் தூதுக் குழு ஒன்று சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டது.

ஜப்பானின் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனமான ‘ஹெய்க’ நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவரும் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளார்.

அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ள பிரதேசங்களின் அரச அதிபர்களுடன் இந்தத் தூதுக் குழுவினர் கலந்துரையாடல்களை நடத்திவருகின்றனர். (ஒ-12)

# நடைபாதை வியாபாரம் இனி மரக்கறிச் சந்தையில்

## யாழ்.பொலீஸார் ஏற்பாடு

கொழும்புத்துறை,ஜூன்9

யாழ்நகரின் மையப் பகுதியில் நடைபெற்றுவந்த நடைபாதை வியாபாரம் யாழ்நகர மரக்கறிச் சந்தை வளாகத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு பொலீஸாரும். யாழ்.மாநகர சபையும் இணைந்து இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டன.

ஏ-9 வீதி திறக்கப்பட்டதையடுத்து தென்பகுதியில் இருந்துவரும் பலதரப்பட்ட வியாபாரிகளும் யாழ்நகரப் பகுதியில் நடைபாதை வியாபாரத்தை மேற்கொண்டமையால் நகரில் போக்குவரத்து நெருக்கடிகள் உட்பட மக்கள் பல சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இந்நெருக்கடியை தீர்க்கும் முகமாகவே இந்த இடம் மாற்றீடு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் -

இந்த ஒழுங்கு விதிகளை மீறி பிற இடங்களில் நடைபாதை வியாபாரம் செய்வோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் -

போக்குவரத்துப் பொலீஸார் எச்சரித்துள்ளனர்.

## படையினர் விலகியபோதும்

# இயங்கமுடியாத நிலையில் அச்செழு சைவப்பிரகாசம்

கோப்பாய்,ஜூன்9

அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையிலிருந்து படையினர் வெளியேறியபோதும் அங்கே கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கக்கூடிய நிலை ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரம் மற்றும் தண்ணீர் வசதிகள் அற்ற நிலையில் இருப்பதுடன் கட்டடங்களுள் ஒன்று மட்டுமே ஓரளவு பயன்படுத்தத்தக்க வகையில் காணப்படுகின்றது.

மேலும் பாடசாலையின் சுற்றுப்புறங்களில் மிதிவெடிகள் இருக்கும் அபாயம் உள்ளதாகவும், கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட சிரமதானத்தின் பின் குப்பைகளை எரியூட்டிய போது சில வெடிபொருள்கள் வெடித்ததாகவும் பாடசாலை வட்டாரம் தெரிவித்தது.

இதனால் பாடசாலையை இயககுவதற்கு உதவி வழங்கும் நிறுவனங்களின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது. (ஓ-13-72)

# படையினர் வெளியேறாவிட்டால் மறியல் போர் நடத்துவோம்

## மடத்தடி மக்கள் எச்சரிக்கை

தென்மராட்சி,ஜூன்9

சாவகச்சேரி மடத்தடிப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரை வெளியேற்றி தாம் மீளக் குடியமர்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் நேற்றுமுன்தினம் தென்மராட்சிப் பிரதேச செயலருக்கு மகஜர் ஒன்றினைக் கையளித்துள்ளனர்.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் தமது வீடுகளிலிருந்து படையினர் வெளியேறாவிட்டால் மறியல் போராட்டத்தினை நடத்தவுள்ளதாக அவர்கள் மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் இப்பகுதி மக்கள் தமது வீடுகளை மீள வழங்குமாறு கோரி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் ஊடாக இப்பகுதி படை அதிகாரியிடம் கையளித்தபோது 15 தினங்களில் படையினரை வெளியேற்றி வீடுகளைக் கையளிப்பதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை படையினர் வெளியேறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளாததால் மறியல் போராட்டம் நடத்தப்போவதாக மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ஓ-117)

## குடிதண்ணீர் குழாய்கள் சீரமைப்பு

அரியாலை,ஜூன்9

கொழும்புத்துறை மேற்கில் நிலத்தடி குடி தண்ணீர்க் குழாய்கள் சீர் செய்யப்பட்டு வருகின்றன.

இலந்தைக்குளம் வீதி மற்றும் புங்கன்குளம் வீதிப் பகுதிகளில் குடிதண்ணீர் விநியோகத்தை ஆரம்பிக்கும் பொருட்டே இப் பணி மேற்கொளளப்படுகின்றது. (ஓ-13-17)

## தொடர்புகொள்ளவும்

கடந்த ஜூன் 3ஆந் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் வழியில் பல்கலைக்கழக நூலக அட்டை, அல்பம் மற்றும் முக்கிய ஆவணங்களடங்கிய குமாரசுவாமி சிவாகரன் என்பவரது பிரயாணப்பை புளியங்குளத்தில் தவறுதலாகக் கைமாறிவிட்டது. ஆக்வே, தயவுசெய்து தவறுதலாக பையை மாறி எடுத்தவர்கள்

**மா.குமாரசுவாமி**

*புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்*

என்ற முகவரிக்குத் தகவல் தரவும்.

(4664)

## திருமணநாள் வாழ்த்து

இன்று (09.06.2002) ஞாயிற்றுக்கிழமை லண்டன் மாநகரில் நல்லறமாகிய இல்லற வாழ்வில் இனிதே இணையும் புதுமணத் தம்பதிகளான

திருநிறை செல்வன் **வில்வராஜ்** (சிவா) - திருநிறை செல்வி **பாமினி** (நிஷா)

இருவரையும் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி பல்லாண்டு காலம் நலமே வாழ வாழ்த்துகின்றோம்.

அன்பு அம்மா, ஆசை அப்பா,
ஆருயிர் சகோதரி மற்றும்
உறவினர்கள்.

*101, இராஜ வீதி,*
*கோப்பாய்.* (4665)

## 2003 A/L இரசாயனவியல் (Group class) திரு.டயஸ்

பிரிவு 1: **Paper class**

அசேதன இரசாயனம்

*துரிதமீட்டலுடன் கூடிய சிறு அலகு ரீதியிலான கடந்தகால வினாத்தொகுப்பு 1979-2002*

பிரிவு 2: **Theory class**

அவத்தைச் சமநிலை

குறிப்பு :- பரீட்சைக் கருத்தரங்கு உட்பட மாதம் இரு பரீட்சைகள்

ஆரம்பம் :- (18-06-2002) 3.00 மணி

53/1, புது வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

(4663)

## கண்ணீர்க் காணிக்கை

இணுவில் தென்மேற்கு கிராம முன்னேற்ற அபிவிருத்திச் சங்க முன்னாள் தலைவரும் உடுவில் பிராந்திய சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க உபதலைவரும் உள்ளூராட்சி மன்ற அதிகாரமளிக்கப்பட்ட ஓய்வுபெற்ற உத்தியோகத்தருமாகிய

### கந்தையா அம்பலவாணர்

அவர்கள் 06.06.2002 காலமான செய்திகேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த வேதனையும் அடைகின்றோம். அன்னாருக்கு கண்ணீர்க்காணிக்கை செலுத்தி எமது இதய அஞ்சலியைச் சமர்ப்பிப்பதோடு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஆத்மா சாந்தி அடைவதாக!*

- இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம்,
இணுவில் அபிராமி சி.க.வ.கூ.சங்கம்,
இணுவில் இந்து விளையாட்டுக் கழகம்,
இணுவில் மேற்கு விவசாயிகள் சம்மேளனம்.

(4659)

**FORUT** **requires a spacious house in Point Pedro, preferably along the main Point Pedro road for our Jaffna East project office with the following minimum requirements:**

- Fairly large compound with provision to put up a training center 20 ft x 40 ft.
- Parking space to park at least two vehicles at a time.
- Parapet wall or well secured fencing around the compound.
- Electricity supply with proper wiring system.
- Pipe borne water supply system.
- Independent well with good drinking water.
- In good condition for immediate occupation.

Please send full details to:

**Programme Manager,**
**FORUT,**
*67, Temple Road, Jaffna.*

(4554)

## ரூபவாஹினியில் இன்று பிற்பகல் சிவாவின் பேட்டி

தமிழர் விடுதலைக் கூட்டணயின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அமரர் மு.சிவசிதம்பரத்தின் தொலைக்காட்சிப் பேட்டியொன்று இன்று பிற்பகல் 2 மணிக்கு 'ரூபவாஹினி' தொலைக்காட்சியில் ஒளிபரப்படவுள்ளதாக நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ள வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்தப் பேட்டி மறு ஒளிபரப்பாகும். (ஒ)

## கருத்தரங்கும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம்,ஜூன்9

தேசிய கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் 'கருத்தரங்கும் கலந்துரையாடலும்' நிகழ்வு நாளை 4 மணிக்கு திருநெல்வேலி சந்திக்கு அணமையிலுள்ள இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கவிஞர் இ.முருகையன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பேராசிரியர் சி.சிவசேகரத்தின் 'மக்கள் இலக்கியம்' எனும் கருத்துரை இடம்பெறவுள்ளது. (ஒ-13)

## மட்டக்களப்பில் பட்டதாரிகள் போராட்டம்

மட்டக்களப்பு,ஜூன்9

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினர் ஆறாவது நாளாக நேற்றுமுன்தினம் வலயக கல்விப் பணிமனை முன்பாக மறி யற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்விப் பணிமனையின் பிரதான நுழைவாயிலை மூடி அவர்கள் மேற்கொண்டுவரும் இந்தப் போராட்டத்தினால் பணிமனையின் செயற்பாடுகள் செயழிலந்தன.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு போட்டிப் பரீட்சையின்றி நியமனங்களை வழங்க வேண்டும் எனக்கோரியே இவர்கள் தமது போராட்டத்தை நடத்தி வருகின்றனர். (ஒ-4-12)

## ஆசிரியர்களுக்கு சம்பள நிலுவை இம்மாதம்

யாழ்ப்பாணம்,ஜூன்9

வடக்கு - கிழக்கில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படாதுள்ள சம்பள நிலுவையில் 40 வீதக் கொடுப்பனவு இம்மாத சம்பளத்துடன் இணைத்து வழங்கப்படவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், கல்வி அமைச்சருக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பில் இது தொடர்பான இணக்கம் காணபபட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பள நிலுவை வழங்கப்படவேண்டுமெனக் கோரி தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த காலங்களில் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டமை தெரிந்ததே. (எ-13)

## மோட்டார் சைக்கிள்கள் தடுத்து வைப்பு

கொடிகாமம்,ஜூன்9

கொடிகாமம் பொலீஸ் நிலையத்தில் பெருமளவில் மோட்டார் சைக்கிள்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிள்களுக்குரிய அனுமதிப்பத்திரங்கள், ஆவணங்கள் மற்றும் தலைக் கவசம் அணியாமல் சென்றவர்களின் மோட்டார் சைக்கிள்களே இவ்வாறு பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களில் பெரும்பாலானவை வன்னியிலிருந்து யாழ்ப்பாணம் வந்தவர்களுடையவை என்று தெரிவிக்கப்பட்டது. (எ-13-ரி)

## கண்ணீர் அஞ்சலி

யா/விக்னேஸ்வரக் கல்லூரியின் ஸ்தாபக குடும்ப உறுப்பினரும், கல்லூரி அன்னை உருவாக்கிய புகழ்பூத்த தலைமகனும், சட்டத்தரணியும், முதுபெரும் அரசியல் ஞானியுமாகத் திகழ்ந்து எம் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவருமான எம் தவப்புதல்வர்

### அமரர் முருகேசு சிவசிதம்பரம்

அவர்களுக்கு கல்லூரி மாதா தன் கண்ணீரைக் காணிக்கையாக்குகிறாள்.

எம் கல்லூரிச் சமூகம் அன்னாரின் குடும்பத்தினருடன் துயரத்தைப் பகிர்ந்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றது.

*ஓம் சாந்தி!*

அதிபர்,ஆசிரியர்,
ஊழியர், மாணவர்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

யா/விக்னேஸ்வரக் கல்லூரி,
(C-22443) *கரவெட்டி.*

## கண்ணீர் அஞ்சலி



எனது தொழில் வளர்ச்சியின் ஆரம்ப காலத்தில் உள்ளன்பு கலந்த சிரிப்பொலியோடு அன்பாக அரவணைத்து முக்கிய ஆலோசனைகள் வழங்கியவரான

எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய

### அமரர் மு.சிவசிதம்பரம் ஐயா

அவர்களின் ஆத்மா சாந்தியடைய எனது குடும்பமும் தொழில் ஸ்தாபன ஊழியர்களும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொன்.வன்னியசிங்கம (உரிமையாளர்), விஜயபாலா (மகன்)
லாலா சோப் தொழிற்சாலை,
அச்சுவேலி.

(C/22448)

## நன்றிக் காணிக்கை

### அமரர் மு.சிவசிதம்பரம்

அவர்கள் நல்லூர்த் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக சேவை ஆற்றிய காலத்தில் அன்னார் எமது நிலையத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தமையை நினைவு கூர்ந்து அன்னாருக்கு எமது நன்றியைக் காணிக்கையாக்குகின்றோம்.

*சிம்மக் குரலோனின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

- நிர்வாகம்,
அரியாலை சனசமூக நிலையம்.

*புங்கன்குளம் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.*

(4660)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதுபெரும் தலைவர்
சிம்மக்குரலோன் உடுப்பிட்டிச் சிங்கம்

### அமரர் மு.சிவசிதம்பரம்

அவர்களுக்கு
கூட்டுறவாளரின் கண்ணீர் அஞ்சலிகள்



### அமரர் மு.சிவசிதம்பரம்

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்.

*பரிஷ் ப.நோ.கூ.சங்கம்,*
*பண்டத்தரிப்பு.*

(C/22446)



## உடுப்பிட்டி (சிங்கம்) சிவசிதம்பரம் மறைந்துவிட்டார்

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் என்பதை நாடாளுமன்றத்தில் துணிந்து எடுத்துக்கூறிய அரசியல் பெரும் தலைவன்

# சிவசிதம்பரம்

அன்னாரின் பிரிவு அவரது குடும்பம், இலங்கை வாழ் தமிழ் மக்கள் ஆகியோருக்கு மட்டுமல்ல உலகில் வாழும் ஒவ்வொரு தமிழருக்கும் பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தியடைய காரையம்பதி வன்புலி வாகனன் ஆண்டிகேணி ஐயனாரை வேண்டுகிறேன்.

க.சுந்தரலிங்கம் (காரை மணிகண்டன்)

(4655)

# அர்ச்சனை மலர்கள்



கரவை வெல்லன் விநாயகர் ஆலய
நீண்டகால முன்னாள் தலைவரும்,
தற்போதைய நிர்வாக சபை உறுப்பினருமாகிய

**உயர்திரு மு.சிவசிதம்பரம்**

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு வெல்லன் விநாயகர் ஆலய ஆதீனத்தார் அடைந்த அதிர்ச்சியும் உளவேதனையும் அளவிடற்கரியன.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வெல்லன் விநாயகரை ஆலய சமூகத்தினராகிய நாம் வேண்டி நிற்கின்றோம். அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி!*

*கரவெட்டி.*
(4680)
நிர்வாக சபை,
வெல்லன் விநாயகர் ஆலயம்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 - 03 - 1986 | 09 - 06 - 2000 |



## செல்வி சங்கரப்பிள்ளை ஷாளினி

(ஆண்டு 9 மாணவி, மகளிர் கல்லூரி, சாவகச்சேரி)

கல்வயல் பதியினிலே கண்ணியமாய் வளர்ந்த பிள்ளை
செல்லப்பிள்ளையார் கோயிலிலே ஷெல்பட்டு துடிதுடித்து வீழ
கண்ணீரும் கவலையும் எம் உள்ளத்தில் மேலோங்க
விண்ணுலகம் சென்றடைந்தாள் செல்வமகள் ஷாளினி.

*கல்வயல்,*
*சாவகச்சேரி.*
(C/22454)
அப்பா, அம்மா,
தம்பி, அப்பம்மா, உறவினர்கள்.
நகரசபை ஊழியர், சாவகச்சேரி.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தாயின் மடியில் | மண்ணின் மடியில் |
|---|---|
| 23 - 05 - 1921 | 09 - 05 - 2002 |



## திருமதி கமலாம்பிகை ஆறுமுகம்தம்பி

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை)

*"உங்களை இழந்து நாங்கள் மட்டும் தவிக்கவில்லை*
*இந்த முப்பத்தியொரு நாள்களும் தவிக்குதம்மா"*

எங்கள் அன்புத் தெய்வத்தின் பிரிவுத்துயர்கேட்டு பிறநாடுகளில் இருந்தும் வேறு மாவட்டங்களில் இருந்தும் எம்முடன் தொலைபேசியிலும், நேரிலும் வந்து எமக்கு ஆறுதல் கூறி இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (09.06.2002) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*274, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(4682)
உங்கள் பாசத்தில்
வளர்ந்த குடும்பத்தினர்.

# 56ஆவது பிறந்த தின நினைவு அஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 09 - 06 - 1946 | 28 - 01 - 2001 |



## அமரர் வல்லிபுரம் மாணிக்கலிங்கம்

எந்தை நீர் எந்நாளும் எம்முடனே
முந்தி நாம் வாழ்ந்த வாழ்வு
விந்தையாம் இவ்வுலகில் இனியேது
உங்கள் அன்பை, ஆதரவை இழந்து
நெஞ்சம் கனக்க ஏங்கி நிற்கின்றோம்.

*உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:*

*566/3, K.K.S. வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(4679)
தாய், மனைவி,
மக்கள்.

## மருத்துவர் இல்லை; நோயாளர் அவலம்

யாழ்ப்பாணம்,ஜூன்9

அனலைதீவு ஆஸ்பத்திரியில் டாக்டர் இல்லாமையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

மேற்படி ஆஸ்பத்திரியில் பத்துக்கும் அதிகமான ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர். டாக்டர் எவரும் இல்லாததால் மேற்படி ஊழியர்களும் வேலை எதுவுமின்றி நேரகாலத்தோடு வீடு திரும்புகின்றனர்.

இதனால் இப்பகுதி மக்கள் சிறிய நோய்களுக்குக் கூட பெருந்தொகைப் பணத்தை செலவு செய்து ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு செல்ல வேண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது.

(எ-9-117)

## அங்குரார்ப்பண கூட்டம்

உரும்பிராய்,ஜூன்9

அச்சுவேலி வட்ட லயன்ஸ் கழகத்திற்கான அங்குரார்ப்பணக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது..

இக்கூட்டம் உரும்பிராய் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் வே.சின்னத்துரை தலைமையில் நடைபெறும்.

(எ-13-ரி)

## இன்று கருத்துரை

யாழ்ப்பாணம்,ஜூன்9

யாழ். சமூக விஞ்ஞான வட்டத்தின் ஒழுங்கமைப்பில் கருத்துரை மற்றும் கலந்துரையாடல் நிகழ்வொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி வி.பி.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பேராசிரியர் சி.சிவசேகரம் 'உலகமயமாதலும் மாற்றுச் சிந்தனைகளும்' என்னும் பொருளில் உரைநிகழ்த்துவார்.

(எ-13)

## சைவசமயபாட கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூன்9

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் சைவசமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சைவ பரிபாலன சபை ஏற்பாடுசெய்துள்ள கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிமுதல் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தொடக்கவுரையையும், யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா நிறைவுரையையும் நிகழ்த்துவர்.

முன்னாள் அதிபர்களான, சைவப் புலவர் சு.செல்லத்துரை, திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம், சைவப் புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை மற்றும் பெரியபுலம் மகா வித்தியாலய அதிபர் செல்வி அ.கந்தையா ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 முதல் 11 வரையிலான வகுப்புக்களில் சைவசமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களை இக் கருத்தரங்கில் கலந்து பயன்பெறுமாறு சைவசமய பரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ. கந்தசாமி கேட்டுள்ளார்.

(எ-ரி)


ராஜா யாழ்ப்பாணம்.
விஜயகாந்த், லைலா,
மணிவண்ணன்
கள்ளழகர்
காட்சிகள்: 10.30, 2.30, 5.30
(C/22356)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
சுப்பர்ஸ்ரார் ரஜனி, நக்மா, ரகுவரன்
பாட்ஷா
காட்சிகள்: 11.00, 2.30, 5.30
நாளை முதல் ரோஜாக்கூட்டம்
(C-22357)

நாகம்ஸ் சுன்னாகம்
இளைய தளபதி விஜய்,
உலக அழகி பிரியங்கா சோப்ரா,
விவேக்
நடித்த
தமிழன்
(சினிமா)
காட்சிகள்: 11.00,3.00,6.30 (புதிய நேரம்)
(4636)


# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்9

யாழ்.வருகை தந்துள்ள இலங்கைப் போக்குவரத்துச்சபை உதைபந்தாட்ட அணி இன்று பிற்பகல் 4.30 மணிக்கு பல்கலைக்கழக மைதானத்தில் யாழ். உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து ஆடவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உடற்கல்விப் பிரிவு இணைப்பாளர் எஸ். கணேசநாதன் கலந்துகொள்கின்றார்.

(ஐ-ரி)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் நடக்கும் ஹொக்கி சுற்றுப்போட்டியில் இன்று பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

- காலை 7.30 மணி - ஓல்ட் கோல்ட்ஸ் வி.கழக அணி எதிர் கிறாஸ்கொப்பர்ஸ் வி.கழக அணி.
- காலை 8.15 மணி - யாழ். பல்கலைக்கழக அணி எதிர் கரவெட்டி கழக அணி.
- முற்பகல் 9 மணி - கோப்பாய் ஐக்கிய வி.கழக அணி எதிர் சென்றலைட்ஸ் வி.கழக அணி.
- முற்பகல் 9.45மணி - உடற்கல்வி பிரிவு அணி எதிர் செவின்ஸ்ரார் வி.கழக அணி.

(ஐ-ரி)

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கம் பருத்தித்துறை திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்திவரும் 19 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை திங்கட்கிழமை நடைபெறும் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் வி.கழக அணியை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

(ஐ-ரி)

★ ★ ★

வல்வை விக்னேஸ்வரா பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு வல்வை சிவகுரு வித்தியாசாலை மைதானத்தில் கா.தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெறுகின்றது.

இப்போட்டிக்கு மன்னார் மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் மோ.சிவமயம் பிரதம விருந்தினராகவும், வல்வை சிவகுரு வித்தியாசாலை அதிபர் த.தபேந்திரராசா சிறப்புவிருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

(ஐ-ரி)

## எங்கிருந்தாலும் தேவன் என்னுடன் தொடர்புகொள்ளவும்

வேலணை மேற்கு தலைகாட்டியைப்
பிறப்பிடமாகக்கொண்ட

**சண்முகம் சிவதேவன்** (44 வயது)

என்பவரைக் கடந்த மூன்று வருடங்களாகக் காணவில்லை. இவரை நேரில் கண்டவர்களோ அல்லது அவரோ இவ்விடயத்தை வாசித்தால் - ***வேலணை வடக்கு, சலையாவத்தை தம்பாபிள்ளை கணபதிப்பிள்ளை (சண்முகராசா)*** அவர்களின் வீட்டிலிருக்கும் **அவரது தாயார் திருமதி ச.மங்கையர்க்கரசி** என்பவருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

(4673)
தகவல்:
திருமதி ச.மங்கையர்க்கரசி.

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் சரவணபவானந்தன்

(ஓய்வுபெற்ற நில அளவையாளர், மட்டுவில் வடக்கு)

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் உப்புவெளி - திருகோணமலையை வதிவிடமாகக் கொண்டவரும் தற்பொழுது கனடாவில் வசித்து வந்தவருமாகிய சு.சரவணபவானந்தன் நேற்றுமுன்தினம் (07.06.2002) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்

அன்னார் சந்தானலட்சுமி (சந்திரா) அவர்களின் அன்புக் கணவரும் நிர்மலன் (சுவிஸ்), நிசாகரன் (நோர்வே), நிறஞ்சனா (கனடா), காஞ்சனா (கனடா), சுபோசனா (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கஜேந்திரன், சிவனேசன், உதயகரன், உமா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற மு.சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற அதிபர்) - அன்னப்பிள்ளை (கொழும்பு) தம்பதிகளின் அன்பு மகனும் கனகாம்பிகை (மீசாலை), குமாரசுவாமி (Rtd. Computer Programmer, Exam Dept.) (கனடா), சிவராசா (கொழும்பு), சிவகுமாரன் (ஆசிரியர், மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்), செந்திரு (ஓய்வுபெற்ற ஒப்புநோக்குநர், தகவல் திணைக்களம், கொழும்பு), சிவானந்தன் (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), சிவசோதி (கொழும்பு), சிவசுந்தரம் (டென்மார்க்), சோதிநாயகி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*18, Canadine Road,*
*Scarborough, On.*
*M1P 3R1,*
*Canada.*
(C/22453)
தகவல்:
சு.சிவகுமாரன்,
சு.சிவானந்தன்.
(சம்பியன்லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்)

## திருமதி விசாலாட்சி மார்க்கண்டு

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி மார்க்கண்டு அவர்கள் மல்லாவியில் காலமானார்.

அன்னார் தனங்களப்பைச் சேர்ந்த மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் திலகவதி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2002) ஞாயிற்றுக்கிழமை மல்லாவியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மல்லாவி.*
(4683)
தகவல்:
திலகவதி (மகள்),
பாலா (மகன்).

## வேலுப்பிள்ளை கந்தையா

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் மறவன்புலோவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தையா நேற்று (08.06.2002) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும் வேலுப்பிள்ளை, தியாகராசா (டோகா), தருமலிங்கம், குணரத்தினம், செல்வரத்தினம், அருந்தவமலர், காலஞ்சென்ற சிவராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகேஸ்வரி, பரமேஸ்வரி, யோகேஸ்வரி, அருந்தவமலர், கமலாம்பிகை, ரங்கநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய வீதி,*
*கோப்பாய் தெற்கு.*
(4675)
தகவல்:
க.குணரத்தினம்
(மகன்)

# தமிழ் நூற்காட்சி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்9

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினர் எதிர்வரும் 12,13, 14ஆம் திகதிகளில் நடத்தவிருந்த "ஈழத்துத் தமிழ் நூற்காட்சி" தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் வாரத்திற் குப் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக் கப்பட்டிருக்கிறது.

இந்த நூற்காட்சியின் தொடர் நிகழ்ச்சியாக இடம்பெறவிருந்த "மூன்றாவது மனிதன்" சஞ்சிகையின் நூற்காட்சியும் விற்பனையும் திட்ட மிட்டபடி எதிர்வரும் 12,13,14,15ஆம் திகதிகளில் நடைபெறும் - என்று தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா தெரிவித்திருக் கிறார். (ஐ)

# மணிக்கூண்டுகள் பொருத்தப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜூன்9

யாழ்ப்பாணம் மணிக்கூண்டுக் கோபுரத்தின் திருத்தவேலைகள் பூர்த்தியடைந்ததை அடுத்து நேற்று கோபுரத்தில் மணிக்கூண்டுகள் பொருத் தப்பட்டன.

கடந்த வருடம் பிரிட்டிஷ் அரசி னால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட இந்த நான்கு மணிக்கூண்டுகளும் கடந்த வாரம் விமானம்மூலம் யாழ்ப் பாணத்திற்கு எடுத்துவரப்பட்டன.

சுமார் ஐந்து அடி விட்டமுடைய இந்த மணிக்கூண்டுகளை பொருத்து வதற்கு என கொழும்பில் இருந்து விசேட பொறியியலாளர்களின் குழு வொன்று யாழ்ப்பாணம் வந்திருந்தது.

மணிக்கூண்டுக் கோபுரத்தின் திறப்புவிழா எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள் ளது. இந்த வைபவத்தில் இலங்கைக் கான பிரிட்டிஷ் தூதர் கலந்துகொள் வார். (ஐ-4)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளர் சந்திப்பிலேயே அவர் இப்படிக் கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, நாடகத் தயாரிப்பாளர் புதுவை அன் பன் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அங்கு இளம்பரிதி மேலும் தெரி வித்ததாவது:-

புரிந்துணர்வு உடன்படிக்கை புலிகளுக்காகச் செய்யப்படவில்லை. மக்களுக்காக, மக்களின் இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்துவதற்கா கவே உடன்படிக்கை செய்யப்பட்டது.

உடன்படிக்கையில் உள்ள விட யங்களை அமுல் செய்யாது மக்களை அச்சுறுத்தும் செயல்களில் படையி னர் ஈடுபட்டுவருகின்றனர்.

குடாநாட்டில் புதிய முகாம்களை அமைத்தும் தற்சமயம் உள்ள முகாம்களைப் பலப்படுத்தியும் மக் களுக்கு உளவியல் ரீதியான பாதிப்பைப் படையினர் ஏற்படுத்தி யுள்ளனர் - என்று குற்றஞ்சாட்டினார் இளம்பரிதி. (ஐ-3-8)

## குடாநாடு நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் சிவசிதம்பரத்தின் உடல் யாழ்நகரில் இருந்து நேற்று பிற்பகல் 2மணிக்கு கரவெட்டிக்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. ஊர்வலம் சென்ற பாதைகளில் எல்லாம் மக்கள் வீதி ஓரங்களில் நின்று மலர் தூவி தமது தலைவருக்கு இறுதி அஞ்சலி யைச் செலுத்தினர்.

ஊர்வலம் புறப்பட முன்னர் கூட் டணி அலுவலகத்தில் வைக்கப்பட்டி ருந்த புகழுடலுக்கு பெரும் எண்ணிக் கையானவர்கள் அஞ்சலி செலுத்தி னர்.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். அலுவலகத்திலிருந்து புறப்பட்ட ஊர்வலம் ஸ்ரான்லி வீதி, காங்கேசன் துறை வீதியூடாகக் கொக்குவில் சந்தியை அடைந்து அங்கிருந்து ஆடியபாதம் வீதியூடாகக் கல்வியங் காட்டுச் சந்தியைச் சென்றடைந்தது. பின்னர் பருத்தித்துறை வீதியூடாக வல்லைச் சந்தியை அடைந்து அங் கிருந்து குஞ்சர்கடைச் சந்தி, உடுப் பிட்டி, வல்வெட்டித்துறை, பருத்தித் துறை, மந்திகை, மாலிசந்தி, நெல்லி யடி ஆகிய இடங்கள் ஊடாகக் கர வெட்டியில் உள்ள அன்னாரின் இல் லத்தைச் சென்றடைந்தது.

முன்னதாக நேற்றுப் பிற்பகல் 2மணியளவில் அன்னாரின் பூதவுடல் அடங்கிய பேழையை தமிழர் விடு தலைக் கூட்டணியின் பிரமுகர்களும் ஆதரவாளர்களும் கூட்டணி அலுவல கத்திலிருந்து ஸ்ரான்லி வீதிவரையும் தோள்களில் தாங்கிச் சென்றனர். அதன்பின்பு விசேட வாகனத்தில் பேழை வைக்கப்பட்டு ஊர்வலம் ஆரம்பமானது.

அஞ்சலி நிகழ்விலும் ஊர்வலத் திலும் கூட்டணிப் பிரமுகர்கள், உறுப் பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் உட்பட பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். உலகத் தமிழர் பேரவை தலைவர் இரா.சனார்த்தனம், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம், தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் எஸ்.ஜெப நேசன், யாழ். மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜா, மல்லாகம் மாவட்ட நீதிவான் பா.சுப்பிரமணியம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமு கர்களான இளம்பரிதி, நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, புரட்சி, தமிழ்வழி, ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) உறுப்பினர்களான த.சுபத்திரன், மனுவல் மங்களநேசன், புளொட் உறுப்பினர்களான மு.தவநாதன், ச. ஜெயச்சந்திரன், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பொ.சிவபாதம் ஆகி யோரும் அஞ்சலி செலுத்தியோரில் அடங்குவர்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நடை பெறவுள்ள இன்றைய தினமும் குடா நாட்டில் பூரண துக்கம் அனுஷ்டிக்கப் படும். (ஐ-4-8-9-10-15-31-173-ரி)

## சிவாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் உள்ளூர் அரசியல் பிரமுகர்களும், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பராவும் இறுதிச்சடங்கில் கலந்துகொள்வர். பல்லாயிரக்கணக்கான மக்கள் சோனப்பு மயானப் பகுதியில் ஒன்று கூடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-3-10-8-173)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுடன் அரசு நடத்தவுள்ள சமாதானப் பேச்சுகளுக்கு ஆதரவு திரட்டும் நோக்குடன் பிரத மர் ரணில் விக்கிரமசிங்க ஐந்து நாள் பயணமாக இந்தியாவுக்குச் சென்றுள் ளார்.

இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயுடனும் ஏனைய அரசியல் தலைவர்களுடனும் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் குறித்து பிரதமர் விவா திக்கவுள்ளார்.

இந்த மாத இறுதியில் அல்லது ஜூலை மாத நடுப்பகுதியில் நடை பெறலாம் என எதிர்பார்க்கப்படும் சமா தானப் பேச்சுக்கு முன்னர் விடுதலை புலிகள் மீதான தடையை நீக்கப்போவ தாக இலங்கை அரசு அறிவித்தபின் பிரதமர் இந்தியாவுக்கு விஜயம் செய் துள்ளார். (ஐ-6-9)

# அமைச்சர் கரு ஜெயசூரிய சாவகச்சேரிக்குச் செல்வார்

யாழ்ப்பாணம்,ஜூன்9

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம்.சிவசிதம்பரத்தின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றுவ தற்காக இன்று வருகைதரும் மின் சக்தி, வலு அமைச்சர் கரு ஜெய சூரிய இங்கு பல்வேறு நிகழ்ச்சிகளி லும் பங்குபற்றவிருக்கின்றார்.

இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட பின்னர் அமைச்சர் சாவகச் சேரி நகரப் பகுதியைப் பார்வையி டுவார்.

நண்பகல் ஒருமணிக்கு மின்சார சபை உயர் அதிகாரிகள், பெற்றோலி யக் கூட்டுத்தாபன அதிகாரிகள் ஆகி யோரை அமைச்சர் மகேஸ்வரனின் இல்லத்தில் சந்திப்பார்.

மீனவர் சங்கங்களின் பிரதிநிகளை யும் அமைச்சர் அங்குவைத்து சந் திக்க ஏற்பாடகியுள்ளது.

அதன்பின்னர் சுன்னாகம் மின் நிலையத்தைப் பார்வையிடும் அமைச் சர் பின்னர் சர்வமதத் தலைவர்களை யும் சந்திப்பார்.

யாழ். நூலகத்தைப் பார்வை யிட்ட பின்னர் நாகவிகாரைக்கு அவர் செல்வார்.

அமைச்சருடனான சந்திப்பில் பங்கு பற்ற வசதியாக பிற்பகல் ஒருமணிக்கு தமது இல்லத்தில் ஒன்றுகூடுமாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின் சாரசபை ஆகியவற்றின் அதிகாரி களை அமைச்சர் மகேஸ்வரன் கேட்டுள் ளார். (ஐ-3)

## புலிகள் கோரிக்கை

கொழும்பு,ஜூன்9

கிழக்கில் இருந்து வன்னிப் பெரு நிலப்பரப்புக்குப் பயணம் செய்வதற்கு கடல் வழிப்பாதை ஒன்றை அமைத் துத் தருமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தக் கண்காணிப் புக் குழுவிடம் கோரியுள்ளனர்.

கண்காணிப்புக் குழுவின் தலை வர் ரொன்ட் புருகோவிட்டை மேற் கோள்காட்டி செய்தி ஏஜென்ஸிகள் இத்தகவலை வெளியிட்டன.(ஐ-6)

## புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்படுத்தும்படி கோரினோம்.

புலிகளுக்கும் - அரசுக்கும் இடை யில் தாய்லாந்தில் நடைபெறவுள்ள பேச்சுக்களில் நாம் அரசு சார்பு பிரதி நிதிகளாகக் கலந்துகொள்ளவுள் ளோம். எனினும் முஸ்லிம்களின் அமோக ஆதரவைப்பெற்ற - பிரத்தி யேகக் கொள்கைகளையுடைய - கட்சி என்ற ரீதியில், எமது முஸ்லிம சமூகத்தின் உரிமைகள் எதனையும் விட்டுக்கொடுக்காமல் - நிதானமாக - விடயங்களை அணுகவேண்டிய அவசியம் எமக்குள்ளது.

புலிகளுடன் உடன்பாடு காணப் பட்ட விடயங்களில் ஏற்படுகின்ற மீறல்கள் தொடர்பாக கண்காணிப்ப தற்காக இருதரப்பு உறுப்பினர்களை யும் கொண்ட குழு ஒன்று விரைவில் ஏற்படுத்தப்படும்.

தாய்லாந்தில் இடம்பெறவுள்ள அரசு - புலிகள் பேச்சுக்கு முன்பதாக மீண்டும் ஒரு தடவை புலிகளைச் சந்தித்துப் பேசுவோம் - என்றார்.

இச்சந்திப்பில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதுதின், அம்பாறை மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரிஸ், முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் பாயிஸ் மற்றும் பசீர் சேகுதாவூத் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-9)

# மக்கள் போராட்டம் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்9

புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றாமல் இழுத்தடிப்பதைக் கண்டித்து, குடாநாடு முழுவதும் முன் னெடுக்கப்படவுள்ள மக்கள் போராட் டம் தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.கோயில் வீதியில் அமைந்துள்ள அரசசார்பற்ற நிறுவ னங்களின் இணைய அலுவலகத் தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்.குடா நாட்டின் அரச, அரசசார்பற்ற நிறுவனங் கள், சமூக, சமய சார்பான நிறுவ னங்கள் மற்றும் தொழிற்சங்க அமைப் புக்கள் உட்பட அனைத்து நிறுவ னங்களினதும் பிரதிநிதிகளை தவ றாது கலந்துகொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலை முன்னர் யாழ்.மத்திய கல்லூரியில் நடத் துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. (ஐ-9-4)

## 18 ஜெனரேற்றர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடங்கிய வாகன அணி கண்டி வீதி யூடாக செல்ல விடுதலைப் புலிகளும் படைத்தரப்பும் அனுமதி வழங்கி யிருப்பதாகவும் -

மின்சார சபை வட்டாரங்கள் தெரி வித்தன.

முற்றுமுழுதாக சீர்செய்யப்படாத கண்டி வீதி வழியே பாரிய கொன் ரெயினர்கள் அடங்கிய நீண்ட வாகன அணி பயணம் செய்வதில் ஏதேனும் தடைதாமதங்கள் ஏற்பட்டால் அன்றி பெரும்பாலும் ஜெனரேற்றர்கள் இன்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துவிடும் என்று மின்சார சபை அதிகாரி ஒரு வர் உதயனுக்குத் தெரிவித்தார்.

புதிதாக எடுத்துவரப்படும் ஜென ரேற்றர்கள் சுன்னாகத்தில் அவற்றுக் குரிய தளங்களில் பொருத்தப்பட்ட பின்னர் இந்தமாத இறுதிமுதல் அல் லது அடுத்தமாத ஆரம்பத்தில் குடா நாட்டுக்கு 24 மணிநேர மின்விநி யோகத்தை ஆரம்பித்துவிட முடியும் என்று அந்த அதிகாரி நம்பிக்கை வெளியிட்டார்.

அமரர் முருகேசு சிவசிதம்பரத்தின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற் காக இன்று யாழ்ப்பாணம் வரவிருக் கும் மின்சக்தி வலு அமைச்சர் கரு ஜெயசூரிய சுன்னாகத்துக்கு சென்று மின்நிலைய பணிகளை நேரில் பார் வையிடுவார் என்று தெரிவிக்கப்படு கின்றது.

புதிய மின்நிலையத்தை நிறுவும் உடன்படிக்கை ஒன்றை இலங்கை மின்சாரசபை பிரான்ஸ் நாட்டின் 'அல்ஸ் ரொம்' (ALSTOM) நிறுவனத்துடன் அண்மையில் செய்துகொண்டது தெரிந்ததே. (ஐ-3)


**பல்கலைக்கழக விரிவுரைகள்**
**(வெளிவாரி)**
**பேராதனை, யாழ்.**
**பல்கலைக்கழகங்களின் பாடநெறிகள்**

| | |
|---|---|
| G.A.Q. | 1st in Com. |
| B.A. I | B.Com I |
| B.A. II | B.Com II |

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன!
விவரங்களுக்கு:
இயக்குநர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
57/13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4642)
25 வருடங்களாக பட்டப்படிப்புகளுக்கெனத் தனித்துவமாக இயங்கும் நிறுவனம்

**யாழ். - கொழும்பு சேவை**
ஆசனப் பதிவுகள் மற்றும் விசேட போக்குவரத்துச் சேவைகளுக்கும் உடன் தொடர்புகொள்ளவும்.
குறிப்பு: 25 கிலோ நிறைக்குட்பட்ட சிறிய பொதிகள் தினமும் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும்.
தொடர்பு:
செல்வம் ஸ்ரோர்ஸ்
330, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.No.: 021-3605 (4661)
கொழும்புத் தொடர்பு:
ஜனனி கொமினிக்கேசன்,
47, விவேகானந்தா மேடு,
கொட்டாஞ்சேனை.
T.P.No. - 347282, 335081

**முக்கிய அறிவித்தல்**
தென்மராட்சி விவசாய சம்மேளனங்களுடன் முக்கிய விடயங்கள் சம்பந்தமாகக் கலந்துரையாடல் நாளை (10.06.2002) திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு உதவி ஆணையாளர் தலைமையில் சாவகச் சேரி கமநல கேந்திர நிலையத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்து தென்மராட்சி விவசாய சம்மேளன தலைவர், செயலாளர், பொருளா ளர்களும் தவறாது சமுகமளிக்க வேண்டுகின்றேன்.
பெரும்பாக உத்தியோகத்தர்,
சாவகச்சேரி/கைதடி.
(4567)

**BITSMANS**
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
இறுதிப் பிரிவு O/L DAY CLASS
* Super Grade ஆசிரிய குழு
* வாரத்தில் 10 மணித்தியாலம் கணித பாட வகுப்பு நடைபெறு கின்றது.
ஆரம்பம்: நாளை (10.06.2002) திங்கள் 8.00 a.m. (4564)

**MARBLES FLOOR POLISHING SERVICES**
மாபிள்ஸ் நிலங்கள் மினுக்கும் சேவை
பழைய ரெறாசோ நிலங்களையும், ஏனைய நிலங்களையும் மெஷின் மூலமாக மினுக்கி, புதுமெருகூட்டி அழகாக்க நாடுங்கள்:
மாபிள்ஸ்
42, நவீன சந்தை, யாழ்ப்பாணம். T.P. 2328.
தொல்புரம், சுழிபுரம்.
(C/22315)
நாம் முன்னர் வேலைசெய்த நிலங்களுக்கு கழிவு உண்டு.
புதிதாகப் போடும் ரெறாசோ வர்ண வேலைகளுக்கு ஓடர் எடுக்கப்படும்.


**மரண அறிவித்தல்**

**தம்பிப்பிள்ளை சூடாமணி**

(பிரபல எழுத்தோவியர், அகிலன்ஸ்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சூடாமணி அவர்கள் நேற்று (08.06.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அகிலன் (மகன்)
(முகாமைத்துவ வணிகபீட இறுதி வருட மாணவன், யாழ். பல்கலைக்கழகம்)

ஜெயாஸ் வீடியோ,
351, நாவலர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (4684)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.